பக்கம்
03



தீர்வுக்கான பேச்சை ஆரம்பிக்குக


# உதயன்

■ சுடர்: 29 ■ கதிர்: 003 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 13, வெள்ளி 29.11.2013


பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




மேக மூட்டம்
28^C 24^C




உதயனுக்கு வழங்கப்பட்ட விருது இது



எல்லை கடந்த ஊடகவியலாளர்கள் அமைப்பின் ஊடக சுதந்திரத்துக்கான மிக முக்கிய சர்வதேச விருது உதயன் பத்திரிகைக்கும், உஸ்பெகிஸ்தான் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் முகமத் பெக்ஜநோவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் வடகிழக்கு பிராந்தியமான ஸ்ரார்ஸ்பேர்க்கில் நேற்றுமுன்தினம் இரவு உலக ஊடகவியலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்த ஒரு நிகழ்வில் வைத்து உதயனுக்கான விருது வழங்கப்பட்டது. ஸ்ரார்ஸ்பேர்க் நகர நிர்வாகத்தின் முதல்வர் உதயனுக்கான விருதை அதன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் ஆகியோரிடம் வழங்கினார். பெரும் சவால்களுக்கு மத்தியில் இலங்கையில் ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் உதயன் பத்திரிகைக்கும்,14 ஆண்டுகள் சிறையில் வாடும் உஸ்பெகிஸ்தான் ஊடகவியலாளரும் மனித உரிமைகள் காப்பாளருமான பெக்ஜநோவ்க்கும் இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (த)

## மன்னாரில் கைதான மூவர் வவுனியாவில்

மன்னார், நவ.29

மன்னார் முருங்கன் பகுதியில் மாவீரர் நினைவு தொடர்பான வாசகங்களை மதிலில் எழுதினர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும் வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைத்து விசாரிக்க மன்னார் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

மன்னார் முருங்கன் பகுதியில் உள்ள வீதிச் சுவர்களில் மாவீரர் தினம் என்று எழுதிய குற்றச்சாட்டின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைது செய்த படையினர் முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

# பிரபாகரன் குடும்பத்தை கணக்கெடுக்க முடியாது

### அவரது குடும்பத்தில் யாரும் உயிருடன் இல்லை என்கிறார் தொகை மதிப்பீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, நவம்பர் 29

"போர்க்கால இழப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் குடும்பத்தைக் கணக்கெடுக்க முடியாது. அவரது குடும்பத்தில் யாரும் உயிருடன் இல்லை" இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் புள்ளி விபரவியல் மற்றும் தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.டபிள்யு.டி. குணவர்த்தன.

போரில் ஏற்பட்ட இழப்புக்களை கணக்கெடுக்கும் நடவடிக்கை நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக 1983 ஆம் ஆண்டு முதல் 2009 மே வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற சொத்தழிவு, உயிரிழப்பு, காணாமற் போனவர்கள் தொடர்பில் கணக்கெடுக்கும் பணிகளை புள்ளிவிவரவியல் மற்றும் தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ளது.

போரில் குடும்பம் குடும்பமாக உயிரிழந்தவர்கள், போரினால் குடும்பமாக வெளிநாடு சென்ற

21 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு மாகாண முதல்வரை திருப்பியனுப்பிய படையினர்

### பாதுகாப்பு வலயத்துக்குள் செல்லவிடாமல்

யாழ்ப்பாணம், நவ.29

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கோயில்கள், பாடசாலைகள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்படுவதைப் பார்வையிடுவதற்காகச் சென்ற வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை படையினர் அங்கு செல்லவிடாமல் திருப்பி அனுப்பியுள்ளனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## புற்றுநோய் வைத்தியசாலையை ஜனாதிபதி திறப்பார்

யாழ்ப்பாணம், நவ.29

தெல்லிப்பழையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புற்றுநோய் வைத்தியசாலை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதி

21 ஆம் பக்கம் பார்க்க

## இறங்குதுறை படைமுகாமை அகற்றுவதற்கு உதவுங்கள்

### உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ.29

குருநகர் இறங்கு துறைக்கான எண்ணெய் களஞ்சியத்தை அமைப்பதற்குத் தடையாக இருக்கும் இராணுவ முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் இறங்குதுறையின்

21 ஆம் பக்கம் பார்க்க

# மாணவருக்குப் போதை மாத்திரை வர்த்தக நிலையத்தை மூட உத்தரவு

யாழ்ப்பாணம், நவ.29


பாடசாலை மாணவர்களுக்கு போதையூட்டும் மாத்திரைகளை விற்பனை செய்த வர்த்தக நிலையத்தை மூடுமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொதியாக்கப்பட்ட 'கோலா', 'ஸ்பிரிற்ரோ' என்று பெயரிடப்பட்ட பானப் பைக்கற்றுக்கள் ஒவ்வொன்றுக்குள்ளும் தலா 6 குளிகைகள் வீதம் வைக்கப்பட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கில் மாவீரர் நாள் பழிவாங்கல் கூட்டமைப்பினரின் வீடுகள் உடைப்பு

## முதல்வர் விக்னேஸ்வரனின் 'கட்அவுட்' எரிப்பு





யாழ்ப்பாணம், நவ. 29
தமிழர் உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த மறவர்களை நினைவு கூரும் மாவீரர் நாளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மரம் நடும் நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் விஷமிகள் தமது அடாவடித்தனத்தைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனின் 'கட்அவுட்' நேற்று அதிகாலை வேளை விஷமிகளால் சேதமாக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளது. யாழ். சிவகுருநாதர் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் வைக்கப்பட்டிருந்த 'கட்அவுட்' டே இவ்வாறு எரித்து சேதமாக்கப்பட்டுள்ளது.

விடுதியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மதிலால் நேற்று அதிகாலை வேளையில் ஏறிப் பாய்ந்த விஷமிகளே 'கட்அவுட்' டை இவ்வாறு எரித்து சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த சில தினங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர்களின் வீடுகள் மீது தொடர்ச்சியாக கல் வீச்சுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன. அதிகாலை வேளைகளில் இனந்தெரியாதோரால் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்ட காலப் பகுதியிலேயே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

மரம் நடும் நிகழ்வில் பங்கேற்ற வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், மாகாண சபை உறுப் பினர் இ. ஆனல்ட் ஆகியோ ரின் வீடுகளே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. நேற்று அதிகாலை 2.50 மணியளவில், திருநெல்வேலி யிலுள்ள வடமாகாண விவசாய அமைச்சரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத 4 பேர் வீட்டின் வெளியில் நின்று முதலில் மின் விளக்கைச் சேதப் படுத்திய பின்னர், வீட்டு ஜன் னல் கண்ணா டிக்கும் கூரைக்கும் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

**பச்சை உரப்பையில் எடுத்து வரப்பட்ட கற்கள்**

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் இ. ஆனல்டின் பாசையூரில் அமைந்துள்ள வீட்டின் மீது நேற்று அதிகாலை 3.40 மணியளவில் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் அவரது வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு உரப்பையொன்றில் தாக்குதலாளிகள் கல் கொண்டு வந்துள்ளனர். தாக்குதல்கள் முடிந்து வெளியேறுகையில் சிங்களத்தில் எழுதப்பட்ட குறித்த பச்சை நிற உரப்பையை அவர்கள் அங்கு விட்டுச் சென்றுள்ள னர்.

வடமராட்சியில் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் வீட்டுக்கு மலர் வளையம் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவரிடம் கேட்ட போது நேற்றிரவு இதைக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். என்ன நேரம் வைத்தார்கள். யார் வைத்தார்கள். என்பது தெரியவில்லை. ஆனாலும் வைத்தவர்களுக்கு நன்றி சொல்கின்றேன். ஏனென்றால் மாவீரர் நாளில் மலரஞ்சலி வைத்து அஞ்சலி செலுத்தியுள்ளனர்- என்றார். (த-5-21-135-422-8)

## கிளிநொச்சியில் இருவர் ரி.ஐ.டியினரால் கைது

கிளிநொச்சி, நவ. 29
கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் இளைஞர்கள் இருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி இரணைமடுச் சந்திப் பகுதியில் கடைகளில் பணிபுரியும் இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரி, முக்கொம்பனைச் சேர்ந்த மனோகரன் முகுந்தன் (வயது 33), கனகாம்பிகைக்குளம்,கிளிநொச்சியைச் சேர்ந்த முத்துலிங்கம் பிரியதர்சன் (வயது - 30) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரணைமடுச் சந்தியில் பட்டாசு வெடிகள் கொழுத்தியதுடன் சுடர் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டிலே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், இருவரும் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-6)

## மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு வடக்கில் போசணைக் குறைபாடு

### உதவியளிக்க ஜப்பான் முன்வருகை

கொழும்பு, நவ. 29
வடக்கில் நலன்புரி நிலையங்களில் இருந்து மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்குப் போசணை மட்டம் மிகக் குறைவாகவுள்ளதாக தெரிவித்துள்ள ஜப்பானிய அரசு, இதனால் பாதிக்கப்பட்டுள்ளசிறுவர்களுக்கு உதவ முன்வந்துள்ளது.


ஜப்பானிய அரசு இலங்கைக்கு 282 மில்லியன் ரூபா பெறுமதியான உணவு நன்கொடை உதவியை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கை அரச உலக உணவுத்திட்டத்தின் ஊடாக பாடசாலைகளில் உணவு விநியோகம் மேற்கொண்டு வருகின்றது இதனூடாக போசணை மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காகவே இந்த நிதியுதவி ஜப்பானிய அரசால் வளங்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம் தெரிதிவித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு 180 மில்லியன் ரூபாவை, ஜப்பானிய அரசு இதே நடவடிக்கைக்காக வழங்கியிருந்தது.

இதன் ஊடாக வடபகுதி சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்த முடியும் என்று ஜப்பானிய தூதரகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (த-5)

## சில இடங்களில் மின் தடை அறிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.29
மின்பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புகளை சீர்செய்வதற்காகவும், பராமரிப்பு மற்றும் கட்டமைப்பு வேலைகளுக்காவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, புங்குடுதீவு பிரதேசம் ஆகிய இடங்களிலும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், விளான், பன்னாலை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலா ளர் அறிவித்துள்ளார். (ஓ)

## கூட்டுறவாளர் வரவேற்புக்கும் மாவீரர் தினத்தன்று தடை

யாழ்ப்பாணம், நவ.29
நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த கூட்டுறவாளர்களை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

மாவீரர் தினத்தன்று அந்த நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியிருந்ததால் அது தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலி சங்கத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த கூட்டுறவாளர்கள் நேற்று முன்தினம் வரவேற்கப்படவிருந்தனர்.

இந்த நிகழ்வு நடைபெறும் இடத்தில் பந்தல் போடப்பட்டிருந்ததுடன் ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன. இந்த வேளையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த படையினர் பந்தலை அகற்றுமாறு எச்சரித்தனர். இதனையடுத்து இந்த வரவேற்பு நிகழ்வு நிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக வட மாகாண கூட்டுறவு ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அருந்தவநாதன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது.

நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்த கூட்டுறவாளர்கள் உரிய நேரத்துக்கு வருகை தராத காரணத்தால் நிகழ்வு நிறுத்தப்பட்டது. வேறு காரணங்கள் இல்லை என்று கூறினர். (த-14)

## 'சார்க்' கூட்டுறவாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ.29
'சார்க் நாடுகளைச் சேர்ந்த கூட்டுறவாளர்கள் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

இலங்கையில் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் கூட்டுறவு நடவடிக்கைகள் மற்றும் சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்தாலோசித்து அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள இவர்கள் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

"_"

**இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்த கூட்டுறவாளர்களே வருகைதந்துள்ளனர்**

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்த கூட்டுறவாளர்கள் இணைந்த குழுவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள சில பிரதான சங்கங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர்.

நீர்வேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், காரைநகர் அம்பாள் மீனவர் சங்கம், பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றை அவர்கள் பார்வையிட்டனர். (த-14)

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.29
யாழ். பல்கலைக்கழகத்தில் "கவிதா ஆற்றல் போட்டியில்" பங்கு பற்றி இரண்டாவது சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்துக்கு முன்னால் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஒன்று கூடுமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப்.சிவநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாட்டு, நாட்டுப்புறப்பாடல், அறிவிப்பாளர் ஆகிய போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். (த-4)

# தீர்வுக்கான பேச்சை ஆரம்பிக்குக

## தெரிவுக்குழுவை நம்பத் தயாரில்லை நாடாளுமன்றில் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு. நவ. 29

"தேசிய இனப்பிரச்சினைக்கு சுயாட்சித் தீர்வு என்பது மிக அத்தியாவசியம் என்பதையே தமிழ் மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எனவே, தமிழர்களுக்கு அவர்களுக்கான உரிமைகள், அரசியல் அபிலாஷைகள் என்பவற்றை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று நாடாளுமன்றில் நேற்று வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

"இதற்கான கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால், தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீது எமக்கு நம்பிக்கை இல்லை. அரசியல் தீர்வைக் காணும் நோக்கில் அது அமைக்கப்பட வில்லை" என்றும் சம்பந்தன் சபையில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே சம்பந்தன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில், போருக்குக்குப் பின்னர் இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு வழங்கியுள்ள உறுதி மொழிகளையும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பொதுநலவாய அமைப்பின் முக்கிய பொறுப்புகளையும், கடமைகளையும் இலங்கை ஏற்றுள்ள நிலையில், ஜனாதிபதி இந்த வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார். இலங் கையில் சிறியதொரு தரப்பைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவே வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் இருக்கின்றன. அதேவேளை, பொறுப்புக் கூறல், மீளிணக்கம் குறித்துக் கவனம் செலுத்தப்படவேண்டும். பொறுப்புக் கூறலை வெளிப்படுத்தாவிட்டால் உண்மையான மீளிணக்கம் ஏற்படாது என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவம் தொடர்பில் முக்கியமாகப் பேசவேண்டியுள்ளது. வடக்கில் மிதமிஞ்சிய இராணுவப் பிரசன்னம் இருக்கின்றது. இராணுவ அதிகாரியாகச் செயற்பட்ட ஒருவரே வடக்கு மாகாணசபையின் ஆளுநராகச் செயற்படுகின்றார். இதனால் தமிழர்களுக்கு அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

**மக்களின் ஆணை எமக்கே**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களுக்கு நடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே ஆணை வழங்கினர். தமிழ் மக்களுக்கு சுயாட்சித் தீர்வு அத்தியாவசியம் என்ற அபிலாஷைகளையே அவர்கள் தேர்தலினூடாக வெளிப்படுத்தினார்கள். ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சுயாட்சி அவசியம் என்ற கோரிக்கையே விடுக்கப்படுகின்றன. எனினும், வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கப் பட வில்லை. அரசு எதேச்சாதிகாரமாகச் செயற்படுகின்றது. இறுதியில் என்ன நடக்கும் என்பதை அறிய தமிழ் மக்கள் காத்தி ருக்கின்றார்கள். 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல் நடத்தப்படுமா?

**போர்க் குற்றம்**

நல்லிணக்கம் ஏற்படுத்தப் பட்டுள்ளது என அரசு கூறு



கின்றது. ஆனால், சிறுபான்மையின மக்களின் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படுகின்றன. இதுதான் நல்லிணக்கமா என நான் கேட்கிறேன். மனிதாபிமான முறையிலேயே போர் முன்னெடுக்கப்பட்டது என அரசு கூறுகின்றது. ஆனால், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் சர்வதேச மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சில குற் றச்செயல்களை போர்க்குற்றங்களாகக் கணிக்கவேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**புலிகளை அழிக்க உலகம் உதவுவது ஏன்?**

அத்துடன், போர்க் காலத்தில் அரசுக் குச் சர்வதேச சமூகம் உதவிகளை வழங்கியது. சர்வதேச புலனாய்வுத் தகவல்களின் உதவியுடன் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. சிறுபான்மையின மக்களுக்கு அரசியல் தீர்வை போரின் பின்னர் இலங்கை வழங்கும் என்ற உத்தரவாதத்தால்தான் அவ்வாறான உதவிகள் போர்க் காலத்தில் அரசுக்கு வழங்கப்பட்டன. இதன்படி தற்போது அரசியல் தீர்வை வழங்குமாறு சர்வதேச சமூகம் இலங்கையை அழுத்துகின்றது. இதற்கு அரசு கூறும் பதில் என்ன?

தமிழ் மக்கள் எந்தப் பழிவாங்கல் நடவடிக்கையிலும் ஈடுபட வில்லை. அப்படியிருக்கையில், ஏன் அவர்கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள்?" என்றார் சம்பந்தன். (த-சி)

# 85% கோழிக்குஞ்சுகள் ஒரே நாளில் இறப்பு

## பொதுமக்கள், பண்ணையாளருக்கு வழங்கப்பட்டவை

அச்சுவேலி ,நவ.29

இந்தவாரம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட பொதுமக்கள் மற்றும் பண்ணையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்ணை வளர்ப்புக்கான முட்டை இடும் கோழிக் குஞ்சுகளில் 85 வீதத்துக்கு மேற்பட்டவை ஒரேநாளில் இறந்துள்ளன. ஏனைய குஞ்சுகளும் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகிய நிலையில் உள்ளன என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மண்ணிற முட்டை இடும் ஒருநாள் குஞ்சு ஒன்று 120 ரூபாவுக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஊடாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. கடந்த திங்கட்கிழமை விற்பனை செய்யப்பட்ட குஞ்சுகளில் பெரும்பாலானவை அடுத்த நாளே இறந்துவிட்டன.

குஞ்சுகள் இறந்ததற்கான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை எனக் கூறப்படுகின்றது. ஆனால் அந்தக் குஞ்சுகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த நோய் மற்றும் பாதிப்பு உள்ளூரில் உள்ள ஏனைய கோழிகளையும் பாதிப்புக்கு உள்ளாக்கலாம் என்று பண்ணையாளர்கள் மற்றும் கோழி வளர்ப்போர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும் அங்கீகரிக்கப் பட்ட நிலையங்களில் இருந்து குஞ்சுகள் விற்பனை செய்யப் படும் போதும், வெளி மாவட்டத்துக்கு எடுத்துச் செல்லப் படும் போதும் அங்கீகாரம் பெற்றகால்நடைவைத்தியர்அதன் தரநிலை மற்றும் உடற் கூற்று அத்தாட்சி சான்றிதழை வழங்க வேண்டும். ஆனால் இறந்து போன ஒருநாள் குஞ்சுகள் விடயத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பாக பண்ணையாளர்கள், கோழி வளர்ப்போர் குழப்பத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

ஒரே தினத்தில் இறந்து போன ஒருநாள் கோழிக்குஞ்சு தொகுதியில் 600 குஞ்சுகள் யாழ். மாவட்டத்துக்கு கொழும்பில் இருந்து ஏற்றி வரப்பட்டதாகவும் அதில் 550 குஞ்சுகள் வரையில் இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-11)



# அதிக விலையில் உரம் விற்பனை

## தனியார் கடைகளில்

தென்மராட்சி,நவ.29

காலபோக நெற்செய்கையாளர்களுக்கு மானிய உரம் வழங்குவதில் இடம்பெற்ற கட்டுப்பாடுகள் காரணமாக தனியார் கடைகளில் அதிக விலையில் உரவகைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று தெரிவித்த நெற்செய்கையாளர்கள், யாழ்.மாவட்ட விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்க மாட்டார்களா என்று கேட்டுள்ளனர்.

காலபோக நெற்செய்கை மேற்கொள்வோர் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களின் உறுதி சமர்ப்பித்து அதற்குரிய வரி செலுத்தியோருக்கே மானிய உரவகைகள் வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உரவகைகள் வழங்குவதற்காக பதிவுசெய்த பலருக்கு இன்னமும் அவை வழங்கப்பட வில்லை. இதனால் பாதிக்கப் பட்ட நெற் செய்கையாளர்கள் தனியார் விற்பனை நிலையங்களில் உர வகைகளை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

ஓர் அந்தர் யூரியா உரம் ஆயிரத்து 200 ரூபாவென விவசாயத் திணைக்களத்தால் நிர்ணயித்த விலை குறிப்பிட்டிருந்த போதிலும் அது 2 ஆயிரம் ரூபா வரை தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் தனியார் வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமேன நெற் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

"_"

**பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்கள் தனியார் விற்பனை நிலையங்களில் உரவகைகளை வாங்கிப்பயன்படுத்தி வருகின்றனர்.**

# கிளிநொச்சி தொழில் சந்தை

கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு தொழிற் சந்தை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கரைச்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் மாவட்ட மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்கள அலுவலர் எஸ்.கமலதாசனின் ஏற்பாட்டில் தொழிற் சந்தை இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் தொழிற் சந்தையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்,யுவதிகள் கலந்து கொண்டு தமது தகைமைக்கேற்ற வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம். மாவட்டத்தில் உள்ள தனியார் துறையினர், தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையினர், கார்கில்ஸ் நிறுவனத்தினர் தொழிற் சந்தையில் கலந்து கொண்டுதகுதியும் திறமையும் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளனர். (வ-9)

# பெயர்ப் பலகை எரிப்பு




யாழ்ப்பாணம், நவ.29

கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்துக்கு தேவபுரம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின்படம் பொறிக்கப்பட்டு நடப்பட்டிருந்த பெயர்ப்பலகை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவத்தில் பெயர்ப் பலகை எரிந்த நிலையில் காணப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.மாநகர சபையின் அனுமதியின்றி இந்தக் கிராமத்துக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு பலகை நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

# நலன்புரி சங்கம் அமைக்க நோயாளர்கள் கோரிக்கை

சாவகச்சேரி, நவ.29

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நோயாளர் நலன்புரி சங்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நோயாளர்கள் உரிய அதிகாரிகளை கடிதம் மூலம் கோரியுள்ளனர்.


குறித்த மருத்துவமனையில் அபிவிருத்திச் சங்கம் செயற்பட்டு அபிவிருத்திப் பணிகளை மட்டும் மேற்கொள்வதால் நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக முறையிட சங்கமொன்றுதேவையாக உள்ளது.

மருத்துவமனை இயங்குவது நோயாளர்களுக்காக என்பதால் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அவசியம் குறித்து கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மருத்துவமனை அபிவிருத்திச் சபை இருந்தும் அது நோயாளர்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் அபிவிருத்தியை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள நோயாளர்கள் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதிச் செயற்படக்கூடிய நோயாளர் நலன்புரி சங்கம் உருவாக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (வ)

"_"

**மருத்துவமனையில் அபிவிருத்திச் சங்கம் செயற்பட்டு அபிவிருத் திப் பணிகளை மட்டும் மேற்கொள்வதால் நோயாளர்களுக்கு. ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக முறையிட சங்கம் தேவையாக உள்ளது.**



அரியாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரியாலை முதியோர் இல்லத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மங்கல விளக்கேற்றி முதியோர் இல்லத்தைத் திறந்து வைத்தார். முதியோர் இல்ல அமைப்பின் தலைவர் எஸ்.தேவராஜா மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அருகில் காணப்படுகின்றனர்.(ஓ-135)

# அனைத்துலக சமூகத்தின் அணுகுமுறை தவறானது

## உருத்திரகுமாரன் தெரிவிப்பு



இலங்கையில் நடைபெற்ற போரில் போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் தராசின் தட்டில் சமநிலையில் போடும் அனைத்துலக சமூகத்தின் அணுகுமுறை தவறானது என்று நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற மாவீரர் நாளில் ஆற்றிய உரையிலேயே மேற்கண்ட கருத்தை அவர் முன்வைத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு குறித்த நீதி கோரும் விடயத்தில் இலங்கை அரசு மேற்கொண்டதும் தொடர்ந்து மேற்கொள்வதும் மனித உரிமை மீறல்களோ அல்லது போர்க்குற்றங்களோ மட்டுமன்றி தமிழர் தேசத்தின் மீதான இன அழிப்பே என்பதற்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவைத் திரட்டுதல் முக்கியமானது ஆகும்.

இவ் விடயத்தில் போர்க்குற்றம் குறித்து இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் ஒரே தட்டில் போடும் அனைத்துலக சமூகத்தின் அணுகுமுறை தவறானது.

இலங்கை அரசு திட்டமிட்ட முறையில் இன அழிப்பை ஒரு செயற்திட்டமாக வகுத்து நடைமுறைப்படுத்தியது. இப்போதும் நடைமுறைப் படுத்தி வருகிறது. இதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

இத்தகையதொரு இன அழிப்பை ஏனைய அரசுகள் ஒரு முரண்பாட்டுத் தீர்வு அணுகுமுறையாக தமது நாடுகளில் எதிர்காலத்தில் பயன்படுத்தாது தடுக்க வேண்டியதொரு கடமையும் அனைத்துலக சமூகத்துக்கு உண்டு.

இதனால் இலங்கை மீதான இன அழிப்பு குறித்த அனைத்துலக விசாரணையும் அதற்குரிய தண்டனையும் நீதி கோரும் விடயத்தில் முக்கியமானவை-என்றார். (வ)

# சடலத்தை எரியூட்ட கட்டணம் அதிகரிப்பு

## தாவடி இந்து மயானத்தில்

வலி.தென்மேற்கு, நவ.29

தாவடி இந்து மயானத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சடலங்களை எரியூட்டுவதற்கான கட்டணம் 250 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்படும்.

இதற்கான தீர்மானம் தாவடி இந்து மயான அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தாவடி வன்னியசிங்கம் வீதியிலுள்ள காந்திஜி கலை வளர்ச்சி மன்றத்தில் வலி.தெற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் இ.பரமேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி மயானத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் குறித்தும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

பிரதேச சபையால் வழங்கப்பட்ட நிதியுதவியுடன் பொது மக்களிடம் திரட்டிய நிதியையும் சேர்த்து சுமார் 18 லட்சம் ரூபா செலவில் மயானத்துக்கு சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது. அத்துடன் குழாய் மூலம் மயானத்துக்கு நீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. மயானத்தை அழகுபடுத்தும் வகையில் பூச் செடிகளை நடுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் சடலங்களை எரியூட்டுவதற்கு அபிவிருத்திச் சபையால் அறவிடப்பட்டு வந்த 1,500 ரூபாவில் சடலத்தை எரியூட்டுபவருக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. மீதி 500 ரூபா அபிவிருத்திப் பணிக்கு ஒதுக்கப்பட்டது. மயானத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் எரியூட்டும் கட்டணத்தை அதிகரிக்க முன்வந்துள்ள அபிவிருத்திச் சபையினர் அடுத்த வருடத்திலிருந்து சடலமொன்றை எரியூட்ட 1,750 ரூபா அறவிடுவதென்று தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி பிரதேசத்திலுள்ள 12 மயானங்களிலும் அபிவிருத்திச் சபைகள் இயங்காததால் மயானத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அபிவிருத்திச் சபைகள் இல்லாத மயானங்களுக்கு அபிவிருத்திச் சபைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர். (வ-115)

# தமிழ்மொழி நடைமுறை மாநாடு சனிக்கிழமை

மாற்றுக் கருத்தாடலுக்கான அமையத்தால் நடத்தப்படும் 'தமிழ்மொழி நடைமுறை மற்றும் மொழியுரிமை' மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதானை டீன்ஸ் வீதியில் உள்ள சமய சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆர்வலர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமையத்தினால் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் உருவாக்கப்பட்ட தமிழ் மொழி நடைமுறை தொடர்பான தகவல்கள், கருத்துக்களை உள்ளடக்கிய இறுதி அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

அமைச்சுக்கள் ரீதியாக தமிழ் மொழியை நடைமுறைப் படுத்துவதற்கான ஒழுங்கு விதிகள் மற்றும் செயல்முறைகள் தயார் செய்யப்படுகின்றன. முதற் கட்டமாக கல்வி அமைச்சு, பொது நிர்வாகம், நீதி அமைச்சு மூன்றிலும் நடைமுறைப்படுத்தக்கூடிய நடைமுறைகள் உள்ளடங்கிய அறிக்கை தயார் செய்யப்படவுள்ளது. (வ-11)

# வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் பார்வையிட முடியும்

## தெரிவிக்கிறார் மன்னார் நகரசபை உறுப்பினர்

மன்னார், நவ.29

மன்னார் நகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மக்களின் பார்வைக்காக மன்னார் நகர சபையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் சபைத் தலைவர் எஸ்.ஞானபிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசு தாசன், செயலாளர் எக்ஸ். எல்.ரெனால்ட் மற்றும் ஏனைய நகரசபை உறுப்பினர்கள் 5 பேரும் பங்குபற்றினர்.

குறித்த கூட்டத்தின் போது சபைத் தலைவர் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை சபையில் முன் வைத்தார்.

இதனை அடுத்து சபை உறுப்பினர்களால் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக விவாதிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

தற்போது வரவு-செலவுத்திட் டம் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானமாக 82,021,360.00 ரூபாவும், மொத்தச் செலவினமாக 82,019,800 ரூபாவும், மிகையாக 1,560 ரூபா எனவும் மதீப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சபையின் நிர்வாகச் செலவினங்களுக்காக 18,791,800 ரூபாவும், சுகாதார சேவைகளுக்காக 19,025,500 ரூபாவும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பௌதிக திட்டமிடலுக்காக 11,532,100 ரூபா, தண்ணீர் சேவைக்காக 5,326,700 ரூபா, பொதுப்பயன்பாட்டுச் சேவைக்காக 1,549,200 ரூபா, நலன்புரி சேவைகளுக்கும் வசதிகளுக்குமாக 3,194,500 ரூபா, மூலதன செலவினங்களுக்காக 22,600,000 ரூபா என்றரீதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சபையின் உறுப்பினர் ரெட்ண சிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

குறித்த வரவு-செலவுத் திட்டத்தை அலுவலக நேரங்களில் மக்கள் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி சீவரத்தினம்



நீதிமன்ற வீதி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சீவரத்தினம் நேற்று (28.11.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மீனாட்சி தம்பதியரின் அன்புமகளும் திரு. சீவரத்தினத்தின் மனைவியும் காலஞ் சென்றவரான சிவசுந்தரத்தின் அன்புத்தங்கையும் திருமதி நாகேஸ்வரியின் அன்புச் சகோதரியும் திருமதி சித்திராவின் (பிரதேச சபை வலி வடக்கு) அன்புத்தாயும் இராசலிங்கத்தின் பாசமிகு மாமியும் சயனீதரன் ,சங்கவி ஆகியோரின் பாசமிகு பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 29.11.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்

தகவல் : இராசலிங்கம் (மருமகன்)
T.P: 077 8996751

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி இராஜேந்திரா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி இராஜேந்திரா நேற்று முன்தினம் (27.11.2013) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சி. இராஜேந்திராவின் (முன்னாள் அதிபர், தொழில்நுட்ப கல்லூரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் - கமலாம்பிகை தம்பதியரின் மகளும் காலஞ் சென்வர்களான சிதம்பரப்பிள்ளை - லக்ஷ்மிபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் அனுஷ்யா, ஈஸ்வரதாசன், சிவதாசன், ஆகியோரின் பாசமிகு தாயும் கணேஷன், சியாமளா, சாந்தி ஆகியோரின் அன்புமாமியும் கெங்காதேவி, சீதாதேவி ஆகியோரின் அன்புசகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல் : Dr. சிவசங்கர்
அனுஷ்யா - 0044 2085502589
தாசன் - Easwaradasan@yahoo.com
சிலோ - 0044 7787518442

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா குணரட்ணம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா குணரட்ணம் நேற்று (28.11.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குஞ்சர்-குணரட்ணம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகரத்தினம், பவளம், காலஞ்சென்ற யோகேஸ்வரர், சிவராசா, குணரட்ணம், நாகேஸ்வரர், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருந்ததி காலஞ்சென்ற சித்திரா, சுரேந்திரா, கனிஸ்ரா, ஸ்ரீ ஜனகன், ஆகியோரின் பாசமிகு தாயும், மகேந்திரன், ஸ்ரீதரன், புவிந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், நிருஜன், தனுப்பிரியா, நிலோஜன், சித்திரப்பிரியா, சுஜிந்தன், லகிபன், கஜிந்தன், நிதிஸ், நவின்சன், தனியாயினி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(40620) (10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்



மாசியபிட்டி சண்டிலிப்பாயைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் நேற்று (28.11.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ரஞ்சிதமலரின் அன்புக்கணவரும் கமலாதேவி, ஜெயலட்சுமி, தேவராசா, சகுந்தலாதேவி, ஆனந்தராஜா, வரதராஜா (பிரான்ஸ்), ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேஸ்வரன், இராஜசிங்கம், செல்வநாகபூரணி, ஜெயதாஸ், நந்தினி, பத்மரஞ்சி,ரவிச்சந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் சதீஸ்வரன் (பிரான்ஸ்), ரஜனி (கனடா), பிரதீஸ்வரன், விக்னேஸ்வரன், யதுர்சன், சிந்துஜா , திவ்யா, டினோசன் (பிரான்ஸ்), ஆதவன், ரெலக்ஷன் , அபிநயா, கௌதமன், சுவேதா (பிரான்ஸ்), சுபானா (பிரான்ஸ்), சுஜா (பிரான்ஸ்), சுகன்யா, ஜனகன், பானுஜன் ஆகியோரின்பேரனும்அட்சரன்(கனடா), அக்ஷயா(கனடா), அக்ஷஜன் (கனடா), அக்ஷரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
021 2241043

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

# மாகாண நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.29

மாகாண நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் இன்று தொடக்கம் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பல பகுதிகளிலும் பருவ கால மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் பரவல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலையில் வடமாகாணத்தில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒழுங்கிணைத்து தீவிரப்படுத்தும் நோக்குடன் வடமாகாண சுகாதார அமைச்சால் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவை பணிமனையால் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அந்தந்தப் பிரதேச செயலர்கள் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்தில் உள்ள நிறுவனங்களையும் கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்பு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகளை திட்டமிடல் வேண்டும்.

அந்தந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட வேண்டும். கிராம மட்ட டெங்குத் தடுப்பு செயலணிக் கூட்டங்களை அந்தந்த கிராம அலுவலர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும். குறித்த நாளில் குறித்த வலயத்துக்குட்பட்ட சகல நிறுவனங்களும், வைத்திய சாலைகளும் பொது இடங்களும், வணக்கத் தலங்களும், வர்த்தக நிலையங்களும் குடியிருப்புகளும், பராமரிப்பற்ற காணிகளும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும் - என்றுள்ளது. (வ-4-9-86)

## பணிக்கொடை கொடுப்பனவை பெறலாம்

யாழ்ப்பாணம், நவ.29

'லங்கா சிமெந்து' நிறுவனத்தில் வேலை செய்த 57 உத்தியோகத்தர்களுக்கான பணிக் கொடைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக் கிழமை யாழ்.மாவட்ட தொழில் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

எனவே பணிக்கொடையைப் பெறும் உத்தியோகத்தர்கள் குறித்த தினத்தில் தேசிய அடையாள அட்டை, வங்கிப் புத்தகத்தின் நிழற்படப் பிரதி, ரூபா 25 பெறுமதியான முத்திரை என்பவற்றுடன் சமூகமளிக்குமாறு யாழ். உதவித் தொழில் ஆணையாளர் நீலலோஜினி ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ரு)

## 83 மாணவர்கள் முதலமைச்சரால் கௌரவிப்பு

தென்மராட்சி, நவ.29

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த வருட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள 83 மாணவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் டிசெம்பர் 4 ஆம்



திகதி நடைபெறவுள்ள கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.


கல்லூரியின் நலன் விரும்பி ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 83 மாணவர்களுக்கான பதக்கங்களை மாணவர்களின் பெயர்களுடன் தயாரித்து வழங்கியுள்ளார். கல்லூரி ஊடாக இம்முறை பல்கலைக்கழக அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் அ.கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

## தீவக கிணறுகளுக்கு விடிவு கிடைக்குமா?



நெடுந்தீவு மேற்கு, சாராப்பிட்டி பகுதியில் உள்ள பத்துக்கும் அதிகமான நல்ல தண்ணீர் கிணறுகள் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன. கடந்த காலங்களில் மக்கள் பாவனையில் இருந்த இந்தக் கிணறுகள் தற்போது குப்பைகள் நிறைந்துள்ளதால் மக்கள் குடிதண்ணீரைப் பெற முடியாத நிலை தொடர்கிறது. இந்தக் கிணறுகளை பிரதேச சபை கவனிப்பதில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சேதமடைந்த நிலையில் காணப்படும் ஒரு நல்ல தண்ணீர் கிணற்றை நெடுந்தீவுக்கு வருகை தந்த மாகாண விவசாய நீர்வள அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (வ-7)

# மீண்டும் பாதீனியம்



யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.மாவட்டத்தில் மழை பெய்தமையைத் தொடர்ந்து பாதீனியத்தின் பெருக்கம் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் இந்த பாதீனியத்தை அழிப்பதில் பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் ஓரளவுக்கேனும் அக்கறை காட்டிய போதிலும் தற்போது இது தொடர்பில் எவரும் பெரியளவில் கவனித்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இந்த நிலையில் பாதீனியம் மேலும் விரைவாக பரவும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

பாதீனியச் செடியால் பொது மக்களுக்கு நோய்கள் பரவக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அத்துடன் பயிர்களின் வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்படும்.

ஆயினும் உரிய அதிகாரிகளும் சமூக ஆர்வலர்களும் இது தொடர்பில் கண்மூடித்தனமாகச் செயற்படுகின்றனர்.

> “ ” புத்தூர், நிலாவரை, அச்சு வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் கைத்தொழிற் பேட்டை, அச்செழு, உரும்பிராய், ஊரெழு, கோப்பாய், நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன், செல்வநாயகபுரம் உள்ளிட்ட பிரதேசங்களில் காணப்படுகின்றது

விவசாயச் சூழலுக்கு ஒவ்வாத பாதீனியச் செடி 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் வருகையோடு யாழ்.மாவட்டத்துக்கு வந்து சேர்ந்தது. இந்திய இராணுவத்தின் உணவுத் தேவைக்காக இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆடுகளின் எச்சங்களோடு இவை இங்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வலி.கிழக்கு பிரதேசத்தில் புத்தூர், நிலாவரை, அச்சுவேலி, சிறுப்பிட்டி, புத்தூர் கைத்தொழிற்பேட்டை, அச்செழு, உரும்பிராய், ஊரெழு, கோப்பாய், நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன், செல்வநாயகபுரம் உள்ளிட்ட பிரதேசங்களில் தற்போது பாதீனியச் செடி பெருமளவில் வளர்ந்து காடுபோல காணப்படுகின்றது. தோட்ட நிலங்கள், வீதியோரங்கள், பயன்படுத்தப்படாத தரிசு நிலங்கள் உள்ளடங்கலாக வீட்டு வளவுகளிலும் பெருமளவில் இது வளர்ந்துள்ளது. வீட்டு முற்றங்களில் கூட பூஞ்செடிகள் போல பாதீனியம் வளர்ச்சியடைந்து காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பாதீனியத்தின் இனவிருத்தி இயல்பு, வறண்ட காலச் சூழலிலும் கட்டுப்பாடின்றி வளரும் தன்மை என்பன காரணமாக இவற்றின் பரவலை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-11-86)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகம் வசதி பெறுகின்றது

பளை, நவ.29

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலக 'பதவி நிலை உத்தியோகத்தர்கள், தவிசாளர் போன்றோருக்கு தனித்தனி அறைகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தலைமை அலுவலக கேட்போர் கூடத்துக்கென அமைக்கப்பட்ட கட்டடத்தில் இதுவரை தவிசாளர் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களும் கடமையாற்றினர்.

செயலாளர் சி.சிவப்பிரகாசம் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக சபை நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு தலைவர், செயலாளர், நிதிக்கிளை, வேலைகள் பகுதி என தனித்தனி கண்ணாடி அறைகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

பிரதேச வளாகத்தில் இருந்த ஆயுள்வேத மருந்தகக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்ததால் நூலகக் கட்டடத்தில் மருந்தகம் இயங்குகின்றது. தலைமை அலுவலக கட்டடத்தில் பொது நூலகம் இயங்கி வருகிறது.

இதனால் தலைமை அலுவலக மாடியில் உள்ள கேட்போர் கூட மண்டபத்தில் பிரதேச சபை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## விதிமுறைகளை மீறிய சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, நவ.29

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய டிராக்டர் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 35 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் மீசாலை ஐயா கடையடிச் சந்தியில் மின்கம்பத்துடன் மோதித் தடம்புரண்ட டிராக்டரின் சாரதிக்கே பத்துக் குற்றச்சாட்டுகளின் பேரில் அபராதம் விதிக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியமை, பொலிஸாரின் சமிக்ஞையை மதிக்காமை, அதிவேகமாக வாகனத்தை செலுத்தியமை, காப்புறுதி, வாகன வரி, சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவை இல்லாமை, அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் வாகனத்தை செலுத்தியமை, அரச உடைமைகளை சேதப்படுத்தியமை, போக்குவரத்து விதிமுறைகளை மீறி பிரதான வீதியில் வாகனத்தைச் செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அனைத்துக் குற்றங்களுக்குமாக 35 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மணல் ஏற்றி வந்த போது ஏ-9 வீதியில் பொலிஸாரைக் கண்டு அருகில் உள்ள ஒழுங்கைக்குள் செல்ல அதிவேகமாக டிராக்டரைச் செலுத்திய போது அங்கிருந்த மின்கம்பத்துடன் மோதி டிராக்டர் தடம்புரண்டமை தெரிந்ததே. (வ-9)

## தென்னை வளர்ப்போர் சங்கக் கூட்டம்

தென்மராட்சி, நவ.29

சாவகச்சேரி பிரதேச தென்னை வளர்ப்போர் சங்கத்தின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்வயல் சண்முகானந்தா பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறும்.

தெங்கு செய்கையாளர்களுக்கு கடன் வழங்கல், மானியம் வழங்கல், வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்குத் தென்னம் பிள்ளைகள் வழங்கல் போன்ற விடயங்கள் குறித்து பிரதேச தென்னை அபிவிருத்தி அலுவலர் சபீதா உரையாற்றவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் சு.பற்குணநாதன் அறிவித்துள்ளார். (வ-9)

## 'பாபா' தருவார் உணவு; மனைவியை பட்டினி போட்டவர் கைது

புதுடில்லி, நவ.29

புனே மாவட்டத்தில் 'பாபா' நமக்கு உணவு அளிப்பார் என்று கூறி தன் மனைவியை மாதக்கணக்கில் பட்டினி போட்ட கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புனேயில் உள்ள ஹதப்சர் என்ற இடத்தில் வசிக்கும் தம்பதியினர் ராம்நாத் தேஷ்முக் (55), கமுதினி(50). இவர்களுக்கு 3 குழந்தைகள். இவர்களின் மகள் சில ஆண்டுகளுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்டார். இரண்டு மகன்களும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள். சகோதரி தற்கொலைக்குப் பிறகு மனநலம் பாதிக்கப்பட்ட இந்த இரண்டு ஆண் மகன்களும் எங்கு சென்றார்கள் என்பது இன்று வரை மர்மமாக உள்ளது.

இந்த நிலையில் அகமது நகரில் உள்ள மிரவல்லி பாபாவின் தீவிர பக்தனான தேஷ்முக் "பாபா நமக்கு சோறு போடுவார்" என்று கூறி மனைவியை மாதக்கணக்கில் பட்டினி போட்டுள்ளார்.

இதனால் உடல் நலம் மிகவும் மோசமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மனைவியைச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் தேஷ்முக் தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் கூறும்போது, "பசியால் வாடிய கமுதினி ஒருநாள் குப்பைத் தொட்டியில் இருப்பதை எடுத்து உண்டதைக் கண்டுவிட்டே பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தோம்" என்று கூறுகின்றனர். இந்தச் சம்பவம்அங்குபெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## அரிய வகை ஒக்ரோபஸ் சிக்கியது

ராமேஸ்வரம், நவ.29

ராமேஸ்வரம் மீனவர்கள் வீசிய வலையில், அரிய வகை ஒக்டோபஸ் சிக்கி உள்ளது. மிகவும் விஷத்தன்மை கொண்ட இந்த ஒக்ரோபஸின் ஓடு, அதிக விலைகொண்டது. இவ்வாறான ஒக்ரோபஸ் வலையில் சிக்குவது அபூர்வம் என்றும் கூறப்படுகின்றது. (ற)



புதுடில்லி சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு கல்யாண்பூரில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் புதுடில்லி முதலமைச்சர் ஷீலா தீட்சித் கலந்துகொண்டு உரையாற்றினார். (ற)

## திருப்பதி ஆண்டவனுக்கும் தீவிரவாத அச்சுறுத்தல்

திருப்பதி, நவ.29

திருப்பதி ஏழுமலையான் ஆலயம் மீது தாக்குதல் நடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று கிடைக்கப்பெற்றதை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மத்திய உளவுத்துறை வழங்கிய எச்சரிக்கையை அடுத்தே அந்த மாநில அரசு பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளது.

ஆலயத்தைச் சூழவும் பெருந்தொகைப் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், வெடிகுண்டு நிபுணர்களும் தினமும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# பாரதிய ஜனதாக் கட்சி அமோக வெற்றிபெறும்

## அருண் ஜெட்லி திட்டவட்டம்

புதுடில்லி, நவ.29

எதிர்வரும் ஐந்து மாநில சட்டசபைத் தேர்தல்களில் சத்தீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்திலும் அமோக வெற்றியீட்டி பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியை தக்கவைத்துக் கொள் ளும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கட்சியின் மூத்த தலைவர் அருண் ஜெட்லி



இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"ராஜஸ்தானிலும் புதுடில்லியிலும் காங்கிரஸ் அரசுக்கு எதிராகக் கடும் அதிருப்தி அலை வீசுகின்றது. நரேந்திரேமோடிக்கு ஆதரவு அலை பெருகி வருகின்றது. அனைத்து இடங்களிலும் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும். காங்கிரஸ் கட்சி அனைத்துப் பக்கங்களிலும் தோல்வியடைந்துள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, "கடனால் திண்டாடுகின்றது காங்கிரஸ் அரசு. அதனால் எந்தவொரு ஆக்கபூர்மான நடவடிக்கை எதையும் மேற்கொள்ள முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் தேர்தல் பரப்புரைகள் தீவிரம் பெற ஆரம்பித்துள்ளன. காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க கட்சியினர் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் சொற்களால் தாக்கி வருகின்றனர். (ற)

## செவ்வாய் செல்வதற்கு தயாராகிறது மங்கள்யான்

புதுடில்லி, நவ.29

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இந்தியாவால் விண்ணில் செலுத்தப்பட்ட மங்கள்யான் விண்கலம் எதிர்வரும் முதலாம் திகதி பூமியின் சுற்று. வட்டப்பாதையில் இருந்து செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்லும் பாதையில் திசை திருப்பப்படவுள்ளது.

தற்போது பூமியைச் சுற்றி வரும் மங்கள்யானின் சுற்று வட்டப்பாதை படிப்படியாக உயர்த்தப்பட்டு வருகிறது.

பல்வேறு சிக்கல்களுக்குப் பின்னர் 2 லட்சம் கிலோமீற்றர் உயரத்துக்கு உயர்த்தப்பட்டது. சுற்று வட்டப்பாதையை உயர்த்தும்போது மங்கள்யானில் உள்ள சிறிய ரொக்கெட்டுகள் இயங்கவில்லை. பின்னர் ஒருவாறு அவை இயக்கப்பட்டன.

தற்போது பூமியின் சுற்று வட்டப்பாதையில் 2 லட்சம் கிலோமீற்றர் தூரத்தை விண்கலம் எட்டி விட்டதால் அடுத்த கட்டமாக மங்கள்யானை செவ்வாய்க் கிரகம் நோக்கி திசை திரும்பும் பணிகள் நடைபெற்று வருகின்றது. பூமியின் சுற்றுவட்டப்பாதையில் இருந்து செவ்வாய் கிரகத்துக்கு திசை திருப்புவது என்பது மிகவும் சிக்கலானது என்பதால் மங்கள்யானுக்கு இது முக்கிய கட்டமாகும். ஏற்கனவே சுற்றுவட்டப்பாதையின் உயரத்தை அதிகரிப்பதில் பல சிக்கல்கள் ஏற்பட்டதை அடுத்து பாதையைத் திசை திருப்பும் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் அதிக கவனம் எடுத்துச் செயற்பட்டு வருகின்றனர். (ற)

## ஐயப்ப பக்தர்கள் ஆற்றில் ஆடைகளை வீசத் தடை

திருவனந்தபுரம், நவ.29

சபரிமலைக்கு வரும் ஐயப்ப பக்தர்கள் பம்பை ஆற்றில் குளித்த பின் தங்களது வேட்டி, துண்டுகளை ஆற்றில் போட்டுச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டள்ளது.

இருமுடி கட்டி வரும் ஐயப்ப பக்தர்கள் பலரும் பம்பை ஆற்றில் குளித்து முடித்ததும், தாங்கள் அணிந்து வந்த வேட்டி மற்றும் துண்டுகளை ஆற்றில் விட்டு செல்கின்றனர். இதனால், ஆற்றில் வீசப்படும் துணிகள் ஆங்காங்கே தேங்கி அசுத்தத்தை ஏற்படுத்துவதோடு ஆற்றில் குளிக்க வரும் பக்தர்களுக்கு சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.

அதனால், இந்த ஆண்டு பம்பை ஆற்றில் குளிக்கும் பக்தர்கள் யாரும் வேட்டி, துண்டுகளை ஆற்றில் போட்டுவிட்டு செல்லக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ற)

## வலுவிழந்தது 'லெஹர்' தப்பித்தது ஆந்திரா



புதுடில்லி, நவ.29

'லெஹர்' புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியுள்ளது.

'லெஹர்' புயல் ஆந்திர கடற்கரையை நேற்றுப் பிற்பகலில் தாக்கி கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் முன்னர் தெரிவித்திருந்தது. எனினும் நேற்று அதிகாலை 'லெஹர்' புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியது. மேற்கு-வடமேற்கு திசையை நோக்கி நகரும் இந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது ஆந்திராவின் மசூலிப்பட்டினம் அருகே கரையைக் கடக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

பைலின், ஹெலன் என அடுத்தடுத்த இரு புயல்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆந்திரம் மாநில மக்கள் லெஹர் புயல் குறித்து பீதியில் இருந்தனர்.

குறிப்பாக குண்டூர், கிருஷ்ணா மேற்கு மற்றும் கிழக்கு கோதாவரி, விசாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் லெஹர் புயலால் பாதிப்பு அதிகம் ஏற்படும் என கூறப்பட்டிருந்தது. தற்போது புயல் வலுவிழந்துள்ளதால் பாதிப்புகள் பெரிதாக இருக்காது என்றே கூறப்படுகிறது. (ற)

# ராகுல் காந்தியைப் பிரதமர் ஆக்கவே தெலுங்கானா அமைக்கிறார் சோனியா

## குற்றஞ்சாட்டுகின்றார் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு

திருப்பதி, நவ.29


"தனது மகன் ராகுல் காந்தியை பிரதமராக்கவே ஆந்திராவைப் பிரித்து தெலுங்கான அமைக்கின்றார் சோனியா காந்தி" என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு.

ஆந்திராவில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை நேரில் பார்வையிட்டு, ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து விவசாயிகளிடம் தகவல் அறிந்து வருகிறார் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு.

அங்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது.

"மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது மாநிலப் பிரிவினை. இது சட்டத்துக்கு எதிரானது. அதற்கு சோனியா காந்திதான் காரணம். சோனியா காந்தி தனது மகன் ராகுல் காந்தியை பிரதமராக்க நினைக்கிறார். அதற்கு வசதியாக ஆந்திராவை இரண்டாகப் பிரித்துள்ளனர். ராகுலைப் பிரதமராக்கவே ஆந்திராவை பிரிக்கிறார் சோனியா.



தெலுங்கானாவில் சந்திரசேகர் ராவுடனும், சீமாந்திராவில் ஜெகன் மோகன் ரெட்டியுடனும் இரகசிய உடன்பாடு ஏற்படுத்தி கொண்டு கூட்டணி அமைத்து அதிக நாடாளுமன்றத் தொகுதிகளைக் கைப்பற்ற நினைக்கிறார்.

மாநில பிரிவினைக்கு முழுச் காரணமும் சோனியா காந்திதான். ஆந்திராவில் இயற்கை சீற்றங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், காங்கிரஸ் அரசின் இயலாமையை காட்டுகிறது. புயல் கடுமையான சேதத்தை ஆந்திர மாநிலத்தில் ஏற்படுத்தியும் அதை முதல்வர் கிரண் குமார் ரெட்டி கண்டுகொள்ளாமல் இருக்கிறார். புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட கூட அவருக்கு நேரம்இல்லை"என்றுகாங்கிரஸ் கட்சியையும், அதன் தலைவி சோனியா காந்தியையும் கடுமையாகச் சாடிக் கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

# காணாமற் போனவர்களை நீதிமன்றில் கையளிக்குக

## *பாக். பிரதமருக்கு நீதிமன்றம் அதிரடி உத்தரவு*

இஸ்லாமாபாத், நவ.27
"காணாமற் போனதாக அரசால் கூறப்படும் 35 பேரை பிரதமர் நவாஸ் ஷெரிப் எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னதாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும்" என்று அதிரடியாக உத்தரவிட்டுள்ளது பாகிஸ்தான் உயர் நீதிமன்றம்.

பாகிஸ்தானில் பல்வேறு சம்பவங்களில் அரசியலுடன் தொடர்புடைய 35 பேர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுக் காணாமற் போயிருந்தனர். அந்தச் சம்பவங்கள் தொடர்பான வழக்கு தற்போது லாகூர் உயர் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் முடிவிலேயே நீதிமன்றம் இவ்வாறு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

"காணாமற்போனவர்கள் பாகிஸ்தான் உளவுத்துறையின் பாதுகாப்பில் உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அவர்களை ஒப்படைப்பதற்கு உளவுத்துறை மறுக்கின்றது. இது தொடர்பாக நீதிமன்றம் இராணுவச் செயலாளரிடம் விளக்கம் கேட்டிருந்தது. எனினும்இராணுவச் செயலர் பதவியையும் வகிக்கும் பிரதமர் நவாஷ் ஷெரிப், உடல் நலக் குறைவு என்பதைக் காரணம் காட்டி நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை" என்று விசனம் வெளியிட்டுள்ளது நீதிமன்றம்.

"காணாமற் போனதாகக் கூறப்படும் அனைவரும் பாகிஸ்தான் உளவுத்துறையினரிடமே இருக்கின்றனர். சட்டத்துக்குப் புறம்பாக யாரையும் கைது செய்து வைத்திருக்க முடியாது. எதிர்வரும் வியாழக்கிழமை அவர்கள் அனைவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும். அல்லது பிரதமர் நவாஷ் ஷெரீப் நீதிமன்றில் முன்னிலையாகி அதுகுறித்து விளக்கமளிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவால் பாகிஸ்தான் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ற)

# பெர்லுஸ்கோனியின் மோசடிகள் நிரூபணம்

## *பறிக்கப்பட்டது பதவி*



ரோம், நவ.29
வரி மோசடி வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து இத்தாலியின் . முன்னாள் பிரதமர் பெர்லுஸ்கோனி அந்த நாட்டு நாடாளுமன்ற செனட் சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பின் மூலமே அவர் நாடாளுமன்ற செனட் சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். செனட் சபையில் நடைபெற்ற வாக்கெடுப்புக்கு முந்தைய விவாதத்தின் போது பெர்லுஸ்கோனியின் ஆதரவாளர்கள், அவரை நெல்சன் மண்டேலாவுக்கு இணையாகப் புகழ்ந்திருந்தபோதும், அவரது நீக்கம் தவிர்க்க இயலாததாகிவிட்டது.

பதவி நீக்கத்தின் பின்னர் தனது இல்லத்துக்கு வெளியே திரண்டிருந்த ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பெர்லுஸ்கோனி, "இது ஒரு ஜனநாயகத் துக்கநாள். இதனால் எனது போராட்டம் ஓயாது" என்று தெரிவித்துள்ளார்.

குறித்த பதவி நீக்கம் காரணமாக, மூன்று முறை இத்தாலியின் பிரதமர் பதவியை வகித்துள்ள பெர்லுஸ்கோனி, எதிர்வரும் 6 ஆண்டுகளுக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது. வரி மோசடி வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. எனினும் கைதுக்கு வாய்ப்பில்லை என்று பெர்லுஸ்கோனியின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# வணிக வளாக விபத்து: விலகினார் லொட்வியா பிரதமர்



ரிகா, நவ.29
லொட்வியாவில் கடந்தவாரம் கட்டட மேற்கூரை இடிந்து விழுந்ததில் 54 பேர் உயிரிழந்தனர். அந்தச் சம்பவத்திற்கு பொறுப்பேற்று அந்த நாட்டு பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அந்நாட்டுத் தலைநகர் ரிகா நகர் அருகே வணிக வளாக கட்டடத்தின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது.

விபத்துக்கு கட்டு மானப்பணியில் ஏற்பட்ட முறைகேடு காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இந்த நிலையில் இந்தச் சோக சம்பவத்துக்கு பொறுப்பேற்று அந்த நாட்டுப் பிரதமர் வோல்டியாஸ் டும்புரோவிஸ்கிஸ் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத் யூனியன் நாடான லொட்வியா 2008ஆம் ஆண்டு முதல் கடும் நிதி நெருக்கடியில் சிக்கிய தவிக்கின்றது. அதனைச் சமாளிக்க எதிர்வரும் ஜனவரி மாதம் யூரோ பிராந்தியத்தில் இணைய உள்ள நேரத்தில் இணைய உள்ளது. இந்த நிலையில் பிரதமர் பதவி விலகியுள்ளமை அந்த நாட்டு அரசியலில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# கடுமையாக மாற்றப்படவுள்ளன பிரிட்டன் குடியேற்றச் சட்டங்கள்

லண்டன், நவ.29
குடியேற்றவாசிகளுக்கான சலுகைகள் தொடர்பான விதிகள் கடுமையாக்கப்படவுள்ளன என்றுபிரிட்டனின்பிரதமர்டேவிட் கமரன் அறிவித்துள்ளார்.

"வேலையற்றோருக்கான சலுகைக்கு தகுதியானவர்கள் தொடர்பான விதிமுறைகள் கடுமையாக்கப்படவுள்ளன. வீட்டுத் திட்டங்கள் தொடர்பான சலுகைகளும் குறைக்கப்படவுள்ளன" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பல்கேரியா மற்றும் ருமேனியா போன்ற நாடுகளில் இருந்து பிரிட்டன் வரும் குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை குறித்து பிரிட்டன் மக்கள் கவலை கொண்டுள்ளனர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இடையில் சுந்திரமாக நடமாடுவது தொடர்பான விதிமுறை பரிசீலனைக்குரியது. அவ்வாறான உரிமை தேவையற்ற ஒன்று என்றும் கமரூன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, பிரிட்டனின் இந்த தீர்மானம் ஆவேசமான ஒன்று என்று கூறியுள்ள ஐரோப்பிய ஆணையாளர், இதன்மூலம் பிரிட்டன் ஓர் மோசமான நாடாக நோக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# சச்சின் புகழ் பாடுவதை உடன் நிறுத்துங்கள்

## *பாக். ஊடகங்களுக்கு எச்சரிக்கை*

லாகூர், நவ.29
சச்சின் புகழ் பாடுவதை உடன் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று பாகிஸ்தான் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது தலிபான் அமைப்பு.

"சச்சின் சிறந்த வீரர் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அவர் ஓர் இந்தியர் என்பதை மறந்து விடாதீர்கள். சச்சின் குறித்து தொடர்ச்சியாகப் புகழ்பாடுவதை நிறுத் திக் கொள்ளுங்கள்" என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. (ற)



பங்களாதேஷில் இடைக்கால அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகளால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வோர் வன்முறைகளில் இறங்கியுள்ளதுடன் கண்ணில் தென்படுவதை எல்லாம் தீவைத்துக் கொளுத்தியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைப் பிற்போட வேண்டும் என்றும், தற்போது இயங்கும் இடைக்கால அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. இந்தநிலையில் எதிர்க்கட்சிகள் தங்கள் கோரிக்கையை கைவிட்டுவிட்டு, இடைக்கால அரசில் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் ஹசினா கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

# பசும்பாலுக்கு மாற்றாக மூஸ் இன மானின் பால்

## *பரிந்துரைக்கின்றது ஐ.நா.சபை*

லண்டன், நவ.29
உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பாலாக பசும்பால் உணவு பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் கொழுப்பு, புரோட்டீனுடன் லேக்டோஸ் என்ற சத்தும் உள்ளது. எனினும் தற்போது பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப போதியளவு பசும்பால் கிடைப்பதில்லை. இதையடுத்து அதற்கு பதிலாக வேறு ஒரு உயிரினத்தின் பாலை அங்கீகரிக்கலாம் என்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி 'மூஸ்' இன மான் மற்றும் கலைமான் ஆகியவற்றின் பாலைப் பயன்படுத்தலாம் என்று ஐ.நா. சபையின் உணவு நிறுவனம் தெரிவித்துள்ளது. பசும் பால் போன்றே அவற்றிலும் அதிக அளவில் கொழுப்பு மற்றும் புரோட்டீன் சத்துக்கள் உள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது. (ற)

# மீண்டும் பிரதமராகின்றார் மெர்க்கல்

பெர்லின், நவ.29
நீண்ட போராட்டங்களுக்குப் பின்னர் மூன்றாவது முறையாக ஜேர்மனியின் பிரதமராகிறார் ஏஞ்சலா மெர்க்கல்.

ஜேர்மனியில் கடந்த செப்ரெம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 631 தொகுதிகளில் ஆளுங்கட்சியான கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் (சிடியூ) 311 இடங்களைக் கைப்பற்றியது. இது 41.5 சதவிகிதம் ஆகும்.

ஆனால் ஆட்சியமைப்பதற்கு 50 சதவிகித வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதால் ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்க வேண்டிய தேவை சிடியூ கட்சிக்கு ஏற்பட்டது. அதையடுத்து சமூக ஜனநாயகக் கட்சியுடன் (எஸ்பிடி) பேச்சு நடத்தப்படுத்தது. கடந்த 5 வாரங்களாக நடைபெற்றுவந்த பேச்சுகளில் இரு கட்சிகளுக்கும் இடையே தற்போது உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.



இதன்மூலம் அடுத்த மாதம் 17ஆம் திகதி ஐரோப்பாவின் மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஜேர்மனியின் பிரதமராக மூன்றாவது முறையாவும் பதவியேற்கும் வாய்ப்பு மெர்கலுக்குக் கிடைக்க உள்ளது.

அதேவேளை, அதற்கு முன்னர் எஸ்பிடி கட்சியினர் நடத்தும் உட்கட்சி வாக்கெடுப்பில் அதன் உறுப்பினர்கள் இந்தக் கூட்டணிக்கு வாக்களித்து அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# இல்லத்தரசிகளே! உங்களுக்கு ஒரு நற்செய்தி

இதோ உங்களுக்கும் உங்கள்
குடும்பத்திற்கும்
ஒளியேற்ற வருகிறாள்

தமிழ் சஞ்சிகை
வரலாற்றில்
இல்லத்தரசிகளுக்கென
தனித்துவமாக
வெளிவரும் மாதாந்த
சஞ்சிகை

**டிசம்பர் 1 முதல்**

நல்லதொரு குடும்பம்

# "ஒளி அரசி"

**இல்லத்தரசிகளின் தோழி**

அரசியல், பாலியல் கலக்காத
ஒரு பரிணாமப் படைப்பு

## குடும்பத் தலைவிகளுக்கான விசேட அம்சங்கள்

- பெண் எனும் தெய்வம்.
- சமையலைத் தாண்டி...., இல்லத்தரசிகளின் வகிபாகங்கள்.
- நட்சத்திர இல்லத்தரசிகள்...
- ஒரு குடும்பத்தின் வெற்றியில் குடும்பத் தலைவியின் பங்கும், அதற்கான ஆலோசனைகளும்.
- குடும்பத் தலைவிகளுக்கான சுயதொழில் முயற்சிகள்.
- கணவன்- மனைவி இடையிலான புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்புகள்.
- குடும்ப ஆரோக்கியம், உளவியல், அறிவியல், சுகாதாரம், மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகள்.
- சினிமா (+) பிளஸ், சினிமா (-) மைனஸ்.
- சுவையாக சமைப்பது எப்படி?
- இல்லத்தரசிகளுக்கான போட்டி

## ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கான பயன் மிக்க அறிவியல், பொழுது போக்கு, கல்விசார் ஆக்கங்கள், ஊக்குவிப்புப் போட்டிகள்.

- உலக வெற்றியாளர்களின் அனுபவங்கள் ....
- உண்மைச் சம்பவங்களும், அதன் படிப்பினைகளும்.
- சிறுகதை - போட்டி.
- கவிதைப் பூங்கா - போட்டி.
- விந்தைமிகு செய்திகள்.
- நகைச்சுவை.
- புதிய விடுகதைகள்.
- விளையாட்டுப் பிரியர்களுக்கான விடயங்களும் போட்டியும்.
- சிறுவர் விருந்து.
- குறுக்கெழுத்துப் போட்டி.
- மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி.

**ஒவ்வொரு இதழிலும் 10,000/= பணப்பரிசுகளை அள்ளி வழங்கும் போட்டிகள்.**

## நேரடியான கல்விசார் துணுக்குகள்

- **(GRADE -5) தரம் 5 புலமைப்பரிசில்** மாணவர்களுக்கான முக்கிய 10 வினாக்களும், உங்கள் பிள்ளைகளை வழிப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் (ஒவ்வொரு சஞ்சிகையிலும் பிரபல ஆசிரியர்களது வினாக்களும் ஆலோசனைகளும் உள்ளடங்கும்.)
- **(G.C.E O/L) க.பொ.த சாதாரண தர மாணவர்களின்** (தரம் 10,11) தனித்துவ திறமையைப் பரிசோதிக்கும். 10 கணித, விஞ்ஞானபோட்டி வினாத்துணுக்குகள்.
- (G.C.E. A/L) உயர்தர வர்த்தக, பொருளியல் மாணவர்களுக்கான பரீட்சைக்கு அவசியமான புதிய விடயங்களும், வினா விடைகளும்.
- (G.C.E. A/L) உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களின் தனித்துவ திறமையைப் பரிசோதிக்கும் பாடநெறிகளிலான 10 வினாத் துணுக்குகள்.

இத்தனை விடயங்களுக்கும் உங்கள் மாதாந்த
முதலீடு ரூ. 60/= மட்டுமே.

**இல்லத்தரசிகளே! நீங்களும் பயன் பெற்று, உங்களூடாக பிள்ளைகளும் பயன் பெறத் தவறாது வாங்கிப் படியுங்கள்; உங்கள் பிள்ளைகளுக்கும் படிக்கக் கொடுங்கள்!**

சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ள அருகில் உள்ள பத்திரிகை
முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் இன்றே
முற்பதிவு செய்து கொள்ளவும்.

அச்சிட்டு வெளியிடுவோர்:
**நியூ விசன் மீடியா சின்டிகேட் பிறைவேட் லிமிட்டட்.**
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14

மேலதிக தொடர்புகளுக்கு:
ஆசிரிய பீடம்:
*011 5738004,*
*011 5738855*

விநியோகம்:
தலைமை அலுவலகம்: *011 5737593/ 0718628379*
வட மாகாணம்: *0215677222/ 0716182182*
மேலதிக முறைப்பாடுகளுக்கும்
விமர்சனங்களுக்கும்: *0714273035*

# ஆலயங்களில் திருட்டு

*தென்னிலங்கையர் தொடர்பு; ஆறு பேர் விளக்கமறியலில்*

முல்லைத்தீவு, நவ.29

வன்னிப் பகுதிகளிலுள்ள ஆலயங்களில் இடம்பெற்ற திருட்டுக்கள் தொடர்பாக தென்னிலங்கையைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

முத்துஐயன்கட்டு விநாயகர் ஆலயத்தில் திருடப்பட்ட பொருள்கள் உட்பட வேறு ஆலயங்களில் திருடப்பட்ட பொருள்களும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இருட்டு மடு, பழம்பாசி ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களிலும் இந்தத் திருட்டுக் கும்பல் கைவரிசையைக் காட்டியுள்ளது.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்கள் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஆலய நிர்வாகத்தினர் உரிய ஆதாரங்களை தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்குரிய பொருள்கள் ஒப்படைக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருட்டுக்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த 6பேரும் முல்லைத்தீவு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போர் ஓய்ந்த பின்னர் வன்னிப் பகுதியில் அமைந்துள்ள ஆலயங்கள் பலவற்றில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-500)

## திறக்கப்படாதுள்ள மூன்று சந்தைகள்

அக்கராயன், நவ.29

கிளிநொச்சி மாவட்டம்- இரணைமடு, வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட் டுள்ள சந்தைகள் திறக்கப்படாமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரணைமடுவில் 50 லட்சம் ரூபா செலவிலும், ஸ்கந்தபுரத்தில் 60 லட்சம் ரூபா செலவிலும் , வட்டக்கச்சியில் 50 லட்சம் ரூபா செலவிலும் இந்தச் சந்தைகள் அமைக்கப்பட்டன. ஆனால் இதுவரை திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலையிலேயே கரைச்சிப் பிரதேச சபையினால் இந்தச் சந்தைகளின் மேலதிக வேலைகளுக்கென 9 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-18)

## விவசாயப் பண்ணைக்குரிய காணியை விடுவிக்குக

*வட்டக்கச்சியில் கோரிக்கை*

அக்கராயன், நவ.29

கிளிநொச்சி, வட்டக்கச்சி விவசாயப்பண்ணைக்குரியகாணியை இராணுவத்திடமிருந்து முழுமையாக விடுவிக்க வேண் டும் என்ற கோரிக்கை மீண்டும் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்துக்குரிய காணியின் ஒரு பகுதியில் இருந்து இராணுவம் வெளியேறிய போதிலும் ஒரு பகுதியில் இன்னமும் நிலை கொண்டுள்ளது. இந்த நிலையில் இந்தக் காணியில் இருந்து இராணுவம் முற்றாக வெளியேறவேண்டும்என்றகோரிக்கை அரச செயலகக் கூட்டங்கள், விவசாயக் கூட்டங்களில்விடுக்கப்பட்டு வருகின்றது.

300 ஏக்கர் வயல் நிலம், 110 ஏக்கர் மேட்டு நிலம் ஆகியவற்றில் இராணுவத்தினர் இன்னமும் நிலை கொண்டுள்ளனர். இந்தக் காணியில் சிறிய குளம் ஒன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## குடிதண்ணீர் விநியோகம் கோணாவிலில் சீர்பெறுமா?

கிளிநொச்சி, நவ.29

கிளிநொச்சி கோணாவில் கிழக்குப் பகுதியில் குடிதண் ணீர்க் கிணறுகள்உவரடைந்து வருவதனால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கோணா வில் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கோணாவில் கிழக்குப் பகுதியில்தற்போது 210 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

இங்குள்ள நன்னீர்க் கிணறுகளில் அதிகமானவை உவர்த்தன்மையடைந்துள்ளன. குடிதண்ணீரைத் தேடி வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். கரைச்சிப் பிரதேச சபையினால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் சேதமடைந்த வீதிகள் காரணமாக சீராக இந்த விநியோகம் இடம்பெறுவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குடிதண்ணீர்த் தேவை யுடைய குடும்பங்கள் கையொப்பமிட்டு இரு கோரிக்கைக் கடிதங்கள் நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபையிடம் கையளித்ததாகவும் இன்று வரை தமக்கு குடிதண்ணீரை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு தமக்கு சீரான குடிதண்ணீரை விநியோகம் மேற்கொள்வதற்குநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். (க-6)





கோப்பாபிலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான புதிய வகுப்பறைத் தொகுதிக் கட்டடம் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிறிட்ரொ நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ஜேக் பெரேரா, சுவீடன் நாட்டைச் சேர்ந்த குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளான மெஸ்ட் மற்றும் ஸ்ரான்பெக் ஆகியோரும் முல்லைத்தீவு மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினரும் பிரதித் தவிசாளருமான அன்ரனி ஜெயநாதன், வலயக் கல்விப் பணிப்பாளர், 59 ஆவது படைப் பிரிவின் அதிகாரி ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க-433)

## கமக்கார அமைப்பினுள் பல்வேறு முரண்பாடுகள்

அக்கராயன், நவ.29

பூநகரி சின்னப்பல்லவராயன் கட்டு கமக்கார அமைப்புக்குள் நிலவும் முரண்பாடுகள் காரணமாக அங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் நலன்சார்ந்து உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்தின் கமக்கார அமைப்பு தமக்குள் முரண்பட்டுக் கொள்வதால் விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

> "-"
> விவசாயிகள் நலன் சார்ந்து உருவாக்கப் பட்ட இந்தக் கிராமத்தின் கமக்கார அமைப்பு தமக்கு முரண்பட்டுக் கொள்வ தால் விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்படும் உள்ளீடுகளை உரிய வகையில் கமக்கார அமைப்பினர் விவசாயிகளுக்குப்பெற்றுக்கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக் களும் விவசாயிகளால் கமக் கார அமைப்பினர் மீது சுமத் தப்பட்டுள்ளது.

பூநகரியின் குடமுருட்டிக் குளத்தின் கீழ்வரும் சின்னப்பல்லவராயன்கட்டு கமக்கார அமைப்பு முக்கியமானதொரு அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## ஒட்டுசுட்டானில் கருத்தமர்வு

முல்லைத்தீவு, நவ.29

ஒட்டுசுட்டானில் யூ.என்.எச்.சீ.ஆர். நிறுவனத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது.

சமூகமட்ட விழிப்புணர்வுப் பாதுகாப்புக் குழுவுக்கும் கிராம மட்ட அமைப்புகளுக்குமான இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடந்த 25 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் 3 மணி வரை இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கான சமூகக் கட்டமைப்புச் சார்பாகவும் அதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையிலும் விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஒட்டுசுட்டான், மாங்குளம் பொலிஸ் அதிகாரிகள், கிராமமட்ட அமைப்புக்கள், சிவில் பாதுகாப்புக் குழுவினர் என 180க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (க-500)

## பகுதிநேர போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம்

*மன்னார் தொழில் நுட்பக் கல்லூரியில்*

வவுனியா, நவ.29

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மன்னார் தொழில்நுட்பக் கல்லூரியின் வருகைதரு பகுதி நேர போதானாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி கோரியுள்ளது. அடுத்தஆண்டுமன்னார்தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது. இங்கு பணிபுரியவென பின்வரும் பாட நெறிகளுக்கான வருகை தரு பகுதி நேர போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மோட்டார் வாகனம் திருத்துதல், வெல்டிங் வேலைகள், அலுமினியம் பொருத்துதல், குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம், ஆங்கிலம் ஆகிய துறைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னார், வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றுப் பூரணப்படுத்தி அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, மன்னார் வீதி, நெளுக்குளம் வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.முகுந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-402)

# மேலதிக காணிகளை வழங்குமாறு சாளம்பைக்குளம் மக்கள் மனு

கிளிநொச்சி, நவ.29

மீளக்குடியமர்ந்துள்ள சாளம்பைக்குளம் மக்கள் தமக்கு மேலதிக காணிகளை வழங்குமாறு கோரும் மனுவை வவுனியா பிரதேச செயலரிடம் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- சாளம்பைக் குளம் கிராமத்தில் வசிக்கும் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த நாம் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீண்டும் கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியமர்ந்துள்ளோம்.

இடம்பெயர்வதற்கு முன்னர் எமது வாழ்வாதாரத் தொழிலாக விவசாயம் விளங்கியது. எமது குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும் வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டதாலும் எமது காணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் விவசாயத்தை எம்மால் மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் போதிய வருமானம் இல்லாததால் எமது வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துக்குரிய காணிகளைப் பெறும் பொருட்டு நாம் பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் பயன் கிடைக்கவில்லை.

எம்மில் குறிப்பிட்ட எண்ணிக்கையான குடும்பங்களுக்கு ஒன்று அல்லது அரைப் பரப்பு அளவிலான குடியிருப்புக் காணியே உள்ளது. இதில் அடிப்படை வசதிகளான மலசலகூடம், கிணறு என்பனவற்றைக் கூட அமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட எமக்கு அரச காணித் திட்டங்கள் மூலமாக விவசாயக் காணி பெற்றுத் தரல் வேண்டும்.

அல்லது அதற்கு மாற்றீடாக எமது ஊரில் இது வரை உரிமை கோரப்படாது இருக்கின்ற காணிகளை வழங்கலாம்- என்றுள்ளது. (க-402)

# மன்னாகண்டலை ஒட்டுசுட்டான் பிரதேசத்துடன் இணைக்கவும்

*விவசாய அமைச்சிடம் மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, நவ.29

மன்னாகண்டல் கிராமத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுடன் இணைக்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் கிராம மக்கள் வட மாகாண சபையின் விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:- ஒட்டுசுட்டான் பிரதேசத்துடன் இணைந்துள்ள மன்னாகண்டல் கிராமம் புதுக்குடியிருப்பு மக்களுக்கான பயிர்ச் செய்கைக் காணியாக விளங்குகின்றது. புதுக்குடியிருப்பு கிராமத்திலிருந்து வரும் மக்களே இங்கு பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்றனர். ஆனால் இவர்களுக்கு வீட்டுத்தோட்டமோ அல்லது வேறு சலுகைகளோ இங்கு கிடைக்கப் பெறுவதில்லை.

> "-"
> ஒட்டுசுட்டான் பிரதேசத்துடன் இணைந்துள்ள மன்னாகண்டல் கிராமம் புதுக்குடியிருப்பு மக்களுக்கான பயிர்ச் செய்கைக் காணியாக விளங்குகின்றது.

மேலும் ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தினால் விவசாய உள்ளீடுகள் வழங்கப்படும்போதும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இவர்கள் வசிப்பதால் இந்த நிலை காணப்படுகின்றது.

எனவே தமது பூர்வீகக் காணிகளை ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ளதால் அந்தப் பிர தேச செயலர் பிரிவோடு இணைத்துக் கொள்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## வீட்டுத்திட்டம் குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு.நவ.29

இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத்திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமை யில் நடைபெற்றது.

மாவட்ட அரச அதிபரின் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் அனுராத குமாரசிறி, உதவிப் பணிப்பாளர் ஏ.ஏ. ஆர்.தரங்க உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## அகத்தியர் ஸ்தானத்தை பார்வையிட்டார் அரச அதிபர்

திருகோணமலை,நவ.29

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா கங்குவேலி அகத்தியர் ஸ்தானத்துக்கு செவ்வாய்க்கிழமை சென்றுள்ளார்.

அகத்திய மாமுனியால் தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்தானம், கடந்த காலப் போரால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனை புனரமைக்க அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட அவர் குறித்த இடத்தை புனரமைப்பதற்கு அனுமதி வழங்கி இருந்தார்.



அகத்திய மாமுனியால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தானம் போரால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னோடியாக அந்த இடத்தை அவர் நேரில் சென்று பார்வையிட்டார். (ச)

## யானை அட்டகாசம்



மட்டக்களப்பு, மீராவோடை பாடசாலை வீதியிலுள்ள வீட்டு வளவுக்குள் புகுந்த யானை அட்டகாசம் புரிந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு அங்கு உட்புகுந்த இந்த யானை அங்கிருந்த மரங்களை சேதப்படுத்தியுள்ளது.

"உறங்கிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது. அதனையடுத்து வீட்டுக்கு வெளியில்வந்து பார்த்தபோது யானை ஒன்று நிற்பதைக் கண்டோம்.

வெளிச்சத்தை போட்டு சத்தம் எழுப்பியபோது யானை பின் வாங்கிச் சென்று விட்டது" என்று வீட்டு உரிமையாளர் தெரி வித்தார். (ச)

# பிக்குவின் அடாவடிக்கு எதிராக போராடுங்கள்

### மக்கள் கிளர்ந்தெழுந்தால் அதன் விளைவுகளை தாங்கமுடியாது என்கிறார் கருணாகரம்

மட்டக்களப்பு.நவ.29

மக்களை அறவழிப் போதனை செய்து அகிம்சை வழிப்படுத்த வேண்டிய பிக்கு செய்யும் அடாவடித்தனத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

பட்டிப்பளை பிரதேச செயலகத்தினுள் நுழைந்த பிக்கு பிரதேச செயலரைத் தாக்க முனைந்து, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-



மக்கள் சந்திப்பு நாளான புதன்கிழமை பிரதேச செயலரது அலுவலகத்துக்குள் சென்ற மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியான அம்பிட்டியே சுமணரத்ன தேரர் பிரதேச செயலரை தகாத வார்த்தைகளால் ஏசியது மட்டு மல்லாமல் அரச சொத்துக்களையும் சேதப்படுத்தியுள்ளார்.

இந்தப் பிக்குவின் அடாவடித்தனம் இடம்பெறுவது முதல் தடவையல்ல. இவ்வாறு பல இடங்களில் அவர் நடந்து கொண்டிருக்கிறார். இப்போது இவர் அரச அலுவலகத்துக்குள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவர் இவ்வாறு நடந்து கொள்வதற்கு அரசும், பாதுகாப்புத் தரப்பினரும் உடந்தையாக இருக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. இதன் பின்னணி என்ன என்று விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

மக்களை நல்வழிப்படுத்தி அறவழிப்போதனை செய்து அகிம்சை வழிப்படுத்த வேண்டிய பிக்கு செய்யும் அடாவடித்தனத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தால் அவரால் அதன் விளைவுகளை தாங்க முடியாது போய்விடும்.

ஒரு அரச அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்வதற்கு இடைஞ்சலாக இருந்தது மட்டுமல்லாமல் வீண்பழியையும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதியான அம்பிட்டியே சுமணரத்ன தேரர் சுமத்தியமை ஏற்றுக்கொள்ள முடியாது-என்றார். (ச)

## வன்முறை பிக்குவை வெளியேற்றுங்கள்

### பிரஜைகள் மன்றம் காட்டம்

மட்டக்களப்பு.நவ.29

பெண் அதிகாரியைத் தாக்க முற்பட்ட பிக்குவைக் கண்டிப்பதுடன், தொடர்ந்தும் இவ்வாறான வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் பிக்குவை மட்டக்களப்பில் இருந்து வெளி யேற்ற வேண்டும் என்று மாவட்ட பிரஜைகள் மன்றம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பின் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் மங்களராமய விகாராதிபதியான சுமணரத்ன தேரர் நடந்து கொண்ட முறை குறித்து மன்றத்தின் தலைவர் வ.கமலதாஸ் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் சகல இனங்கள் மத்தியிலும் அமைதியையும், நல்லுறவையும் மேம்படுத்துவதற்காக பிரஜைகள் குழு மாவட்ட ரீதியாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் சென்ற பிக்கு அலுவலகத்துக்குள் இருந்த அரச உடைமைகளைச் சேதப்படுத்தி ஒரு பதற்றசூழ் நிலையை உருவாக்கியுள்ளார்.

பட்டிப்பளை பிரதேச செயலர் திருமதி வில்வரெட்ணம் எவருடைய அழுத்தத்துக்கும் தலை வணங்காத, பக்கம் சாராத, அரசின் கொள்கைக்கும், சட்டத்துக்கும் மட்டுமே அடிபணிந்து நேர்மையாக கடமையாற்றும் அதிகாரி என்பது அப்பகுதி மக்கள் அறிந்த விடயம்.

மட்டக்களப்பில் சட்டம், ஒழுங்கு, சமாதானம், நல்லிணக்கம் போன்றவற்றின் சீர்குலைவுக்கான ஒரு முகவராக பிக்கு செயற்படுகின்றார்.

இந்தப் பிக்கு கலந்து கொள்ளும் நிகழ்வுகளை இனிமேல் பொது மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும். பொறுமையாலும், அன்புவழி முறைகளாலும், விட்டுக் கொடுப்புடனும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை பிக்கு வன்முறை, கபடத் தனம் போன்றவற்றைக் கையாண்டு தீர்க்க முனைவது அவரது பக்குவமில்லாத தன்மையைக் காட்டுகின்றது.

எனவே இப்பகுதியில் அமைதியை ஏற்படுத்த இந்த பிக்குவை புறக்கணிப்பதன் மூலம் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## குளத்தை புனரமைக்க மக்கள் வேண்டுகோள்

மூதூர்,நவ.29

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள பட்டியனூற்றுக் குளம் சேதமடைந்துள்ளதால் அதனைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் குளத்தின் இடது கரை மற்றும் வலதுகரை வாய்க்கால்கள் சேதமடைந்து மண்ணால் மூடப்பட்டுள்ளன. அதனால் வாய்க்கால்களினூடாக நீரை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, அடுத்து வரும் சிறுபோகச் செய்கையை இந்தக் குளத்தின் கீழ் செய்கை பண்ண முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எனவே இந்தக் குளத்தை உடன்புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-40)





கொரிய நாட்டு கொய்கா நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பார்க் சூக்குடனான சந்திப்பு கொழும்பிலுள்ள கொரிய நாட்டு தூதரகத்தில் அமைந்துள்ள கொய்கா தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், கல்முனை மாநகர முதல்வர் நிசாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இன ரீதியாக முரண்பட்டு மக்கள் வாழமுடியாது

### மாநகர சபை உறுப்பினர் கூறுகிறார்

இன ரீதியாகவோ, பிரதேச ரீதியாகவோ முரண்பட்டுக் கொண்டு கல்முனை மக்கள் வாழ முடியாது என்று கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பறக்கத்துல்லாஹ் தெரிவித்தார்.

கல்முனை மாநகர முதல்வராக பதவியேற்றுள்ள சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்கு முதல்வர் ஆடை அணிவிக்கும் விழா கல்முனைக்குடி நகர மண்டபத்துக்கு அருகில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு முஸ்லிம் ஊர்களுக்கு இடையில் தமிழ் ஊர்களும் அதே போல் தமிழ் ஊர்களுக்கு இடையில் முஸ்லிம் ஊர்களும் என கலந்து வாழ்ந்திருக்கின்றனர்.

கல்முனை மாநகரம் என்பது வெறுமனே ஓர் ஊரையோ அல்லது ஓர் இனத்தையோ பிரதிபலிக்கும் மாநகரம் அல்ல. இது தமிழ், முஸ்லிம் என 11 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு மாநகரமாகும். -என்றார். (ச)

## பெண்கள், சிறுவர்கள் மீது 300 துஷ்பிரயோகங்கள்

### கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தகவல்

மட்டக்களப்பு.நவ.29

நாட்டில் ஒரு மாதத்தில்பெண்கள், சிறுவர்கள் என சுமார் 300 பேர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று கிழக்கு மாகாண கவ்வி அமைச்சர் விமல வீர திசாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக் குட்பட்ட சாதனையாளர் பாராட்டு விழா கொக்கட்டிச்சோலை கலாசர மண்டபத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் ,சிங்கள மக்களின் கலாசாரம், வழிபாட்டு முறைகள் போன்றவை ஒத்தவையாகவுள்ளன. எனினும் கடந்த 30 வருட காலமாக தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சண்டை பிடித்துள்ளனர். அதில் யாரும் வெற்றி பெறவில்லை.

பாடசாலைக்குப் போகும் பிள் ளைகள் கஞ்சா, சாராயம் போன்ற போதைப் பொருள்களைப் பாவிக்கின்றனர். அத்தோடு திருட்டு, கொலை போன்ற செயல்க ளிலும் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயல்கள் நடந்தால் எதற்கு பாடசாலை? நாட்டில் ஒரு மாதத்துக்கு 300பேர் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பாடசாலைகளுக்குச் சென்று படித்தவர்கள்தான் இவ்வாறு பெண்களையும் சிறுவர்களையும் துஷ்பிரயோகம் செய்கின்றனர். -என்றார். (ச-32)

## மாணவர்கள் கைது

மட்டக்களப்பு,நவ.29

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான பதாகைகளைக் கட்டியதாக சந்தேகத்தின் பேரில் இரு மாணவர்களைப் படையினர் கைது செய்து களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வீதியில் கட்டியிருந்த பதாகையைத் தாங்கள் வாசித்துக் கொண் டிருக்கும்போதே தாம் படையினரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டில் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# ஐக்கிய தேசியக் கட்சி பலமடைந்து மஹிந்த அரசை வீழ்த்தவேண்டும்

## மனோ கணேசன் தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சி பலமடைந்து மக்கள் விரோத அரசான மஹிந்த அரசை வீழ்த்தவேண்டும். எனவே, காலத்தை வீணடிக்காமல் மக்களின் வாக்குகளைக் கவரும் விசேட வேலைத்திட்டத்தை ஐ.தே.க. முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உட்கட்சி பிரச்சினைகளால் காலத்தை வீணடித்து உள்ளதையும் இழக்காமல், ஐக்கிய தேசியக் கட்சி இந்நாட்டில் வாழும் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைக் கவரும் புதிய வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். கிராமங்களுக்கு சென்று சிங்கள மக்களுக்கு உண்மைகளை எடுத்துக் கூறும் திட்டம் ஒன்றை ஆரம்பித்து அதை இடை நடுவில் இந்தக் கட்சி கைவிட்டது. அதை விட்ட இடத்திலிருந்து ஐ.தே.க. தொடர வேண்டும்.

தமிழ் வாக்குகளை வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மேல் மாகாணத்தில் நமது கட்சியும் பாதுகாத்து பெற்றுக்கொள்வோம். மலையகத்தில் தமிழ் வாக்குகளைக் கொண்டுள்ள கட்சிகள் உரிய நேரத்தில் நமது தரப்புக்கு வரும். ஆகவே ஐ.தே.க. காலத்தை வீணடிக்காமல் சிங்கள மக்களின் வாக்கு களைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளவேண்டும்

நமது சிறுபான்மை வாக்குகளுடன், சிங்கள வாக்குகளும் சேராமல் இந்த அரசை ஒரு போதும் வீழ்த்த முடியாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இன்று ஐ.தே.கவிடம் எஞ்சியுள்ள சிங்கள வாக்குகளையும் சரத் பொன்சேகா கொண்டு போகும் அறிகுறி தோன்றி வருகிறது. இப்படியே போனால், தமிழ் வாக்கும் இல்லை, சிங்கள வாக்கும் இல்லை என்ற நிலைமை ஐ.தே.கவுக்கு ஏற்படும்.

நீண்ட காலமாக நாங்கள் கூட்டு சேர்ந்து பணியாற்றும் கட்சி என்பதாலும், ஐ.தே.க. பலமடைய வேண்டும் என நான் விரும்புவதாலும், இந்த அரசை வீழ்த்த வேண்டுமென்ற தேவை இருப்பதாலும் இதை நான் அக்கறையுடன் பகிரங்கமாக சொல்லுகிறேன்.

இந்த மஹிந்த அரசு மக்கள் விரோத அரசு. இதை வீழ்த்தியே ஆகவேண்டும். அதற்கான காலம் வந்து கொண்டிருக்கின்றது. இன்று அரசை ஆதரிக்கும் சில தமிழ், முஸ்லிம் கட்சிகள் கூட நன்றாக நடிக்கிறார்கள். அதாவது வேறு வழியில்லாமல் ஆதரிப்பது போல் நடிக்கிறார்கள்.

இந்த அரசை ஆதரிக்க மனசாட்சியுள்ள எந்த ஒரு தமிழனுக்கும், முஸ்லிமுக்கும் முடியாது. இந்த நிலையை சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண் டும். சிங்கள மக்களும் இந்த அரசைத் திட்டி தீர்க்கும் அளவுக்கு வந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் மத்தியில் சென்று அவர்களை அணி திரட்டுவதை யார் செய்வது? அதை ஐக்கிய தேசியக் கட்சி தான் செய்ய வேண்டும். இதை நாங்கள் செய்ய முடியாது. நாங்கள் எங்கள் வேலையை உருப்படியாக செய்து வருகிறோம். தமிழ் மக்களை, முஸ் லிம் மக்களை அணி திரட்டி வருகிறோம். ஐ.தே.க. சென்று சிங்கள மக்களை அணிதிரட்ட வேண்டும். கடந்த காலத்தை போல் கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் கண்ணை மூடிக் கொண்டு யானைச் சின்னத்துக்கு வாக்களிப்பார்கள் என ஐ.தே.க. நினைக்கக் கூடாது - என்றார்.

## கம்பஹா மாவட்ட தமிழர் ஒன்றுகூடல்

'எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் நீர்கொழும்பு உட்பட கம்பஹா மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு உறுதிப் படுத்த போகின்றோம்' என்ற தலைப்பில் ஜனநாயக மக்கள் முன்னணி கம்பஹா மாவட்ட செயற்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை நீர்கொழும்பு நகரில் நடைபெறவுள்ளது.

மாலை 6.30 மணிக்கு நீர்கொழும்பு, எதுகல, பொரு தொட்ட வீதியில் அமைந்துள்ள செரிலேண்ட் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கலந்து கொண்டு மக்களின் கருத்துரைகளைக் கேட்டறிந்து கொள்வார் என முன்னணியின் ஊடக செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கௌரவ அதிதியாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன கலந்து கொள்வார் எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர்கள், கம்பஹா மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், இளைஞர் இணைய உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தீ விபத்தில் ஒருவர் சாவு

நீர்கொழும்பு, கிம்புலாபிட்டியவிலுள்ள பட்டாசு தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கிம்புலாபிட்டி கட்டியவல வீதியைச் சேர்ந்த சமிந் பெர்னாந்து என்பவரே (28 வயது) இந்தத் தீ விபத்தில் உடல் கருகி உயிரிழந்தவராவார்

இந்தச் சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் துஷ்பிரயோகங்களை மட்டுப்படுத்த கடுமையான தண்டனைகளுடன் புதிய சட்டங்கள்

## நீதியமைச்சு துரித நடவடிக்கை

சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகளை மேலும் கடுமையாக்கும் விதத்தில் தற்போதுள்ள சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படுமென நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி டீ சில்வா தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நடைமுறையிலிருக்கும் 1939ஆம் ஆண்டின் சிறுவர் மற்றும் இளைஞருக்கான சட்டம் சமகாலத்துக்கு ஏற்றவகையில் மாற்றம் செய்யப்படவுள்ளது. தற்போதுள்ள சட்டங்களின்படி குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் போதுமானதாக இல்லையென பல்வேறு தரப்புகளில் இருந்தும் விமர் சனங்கள் எழுந்துள்ளதால் அந்தச் சட்டங்களை மீளாய்வு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சட்டங்களை சமகாலத்துக்கு ஏற்றவாறு மாற்றம் செய்யும்போது சம்பந்தப்பட்ட சகல தரப்பினரினதும் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படும். அதன்பின் பிரேரணை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றபின் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அநாதை இல்லங்களும் சிறுவர் காப்பகங்களும் 1941 ஆம் ஆண்டின் அநாதை இல்லங்களுக்கான சட்டவிதிகளுக்கமைய நிர்வகிக்கப்படுகின்றன. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின்கீழ் அவை மாகாணசபைகளின் அதிகாரத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஒருசில மாகாணசபைகளில் இந்த அநாதை இல்லங்களுக்கும் சிறுவர் காப்பகங்களுக்குமான சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த பிரேரணைகள் முன்மொழியப்பட்டுள்ளன. எனினும், அத்தகைய மாற்றங்களுக்கு தேசிய ரீதியில் பொதுவான சட்டப்பிரேரணையொன்று முன்வைக்கப்படுவது சிறந்தது. அதன்மூலம் அநாதை இல்லங்களிலும் சிறுவர் காப்பகங்களிலும் உள்ள பிள்ளைகளின் நலன் பாதுகாக்கப்படுவதுடன், அவர்கள் மீதான வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் மட்டுப்படுத்தப்படும்.

இவ்வாறு விளக்கமளித்தார் நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலின் டீ சில்வா.

## உள்ளாடைக்குள் ஹெரோயின் சரைகள்

நிட்டம்புவ, வல்கம்முல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளோட்டியொருவர் விபத்துக்குள்ளாகி கால் முறிந்த நிலையில் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பலத்த காயங்களுக்குள்ளான அவரை அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்த்த பின்னர் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ உதவியாளர்கள் அவரது உள்ளாடையை வெட்டி அகற்றிய போது அதனுள் இருந்து ஆறு ஹெரோயின் சரைகள் மீட் கப்பட்டதாக நிட்டம்புவ பொலி ஸார் தெரிவித்தனர். இவருடன் சைக்கிளில் பயணித்த மற்றொருவர் காயங்களுக்குள்ளாகி அதே வைத்தியசாலை யில் சிகிச்சை பெறுகிறார்.

நிட்டம்புவ, வல்கம்முல்ல பகுதியில் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பஸ்ஸுடன் நேருக்குநேர் மோதியதால் இந்த விபத்து நடந்துள்ளது. ஹெரோயின் சரைகள் மீட்கப்பட்டதையடுத்து அந்த நபர் பொலிஸ் காவலுடன் சிகிச்சைபெற்று வருகின்றார்.

நிட்டம்புவ தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் வீரசேகரவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

## ஓம்புல்பே பிரதேச சபை பட்ஜெட் தோல்வி

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வச முள்ள பலாங்கொடை - ஓம் புல்பே பிரதேச சபையின் 2014ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 8 மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்துள்ளது.

பிரதேச சபையின் தலைவர் இந்து குணதிலக்க வரவு - செலவுத் திட்டத்தை நேற்று சபையில் சமர்பித்தார்.

இதன்போது வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக 10 வாக்குகளும், ஆதரவாக 2 வாக்குகளும் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன.

12 உறுப்பினர்களைக் கொண்ட இந்த பிரதேச சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நால்வர் இருக்கின்ற நிலையில் அவர்களுடன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அறுவர் இணைந்து குறித்த வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புவசமுள்ள பேலியகொட நகர சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமும் நேற்றுமுன்தினம் தோல்வியடைந்துள் ளது.

# முள்ளிவாய்க்கால் அவலத்தின்போது அரசுடன் இருந்துவிட்டு இப்போது வீர வசனம் பேசுவதா?

## குகவரதனுக்கு கங்காதரன் பதிலடி

முள்ளிவாய்க்கால் அவலங்களின் போது முன்னாள் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனின் ஆலோசகராக அரசுடன் இணைந்திருந்த சண்.குகவரதன், இன்று வீர வசனங்கள் பேசி தமிழ்த் தேசிய அறிக்கை விடுவதைப் பார்க்கும்போது வேடிக்கையாக உள்ளது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கலாநிதி சுரேஷ் கங்காதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2007-2008 ஆம் ஆண்டுகளில் காணாமல் போனவர் களுக்கான பல ஆர்ப்பாட்டங்களை எமது கட்சியின் தலைவர் பிரபா கணேசன் அன்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்து கொண்டு நடத்திய போதும், இறுதிக்கட்ட போரில் முள்ளிவாய்க்கால் அவலங்களின் போதும் முன்னாள் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ண னின் ஆலோசகராக அரசுடன் இணைந்திருந்த குகவரதன் இன்று ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகரசபை உறுப் பினராக இருந்துகொண்டு தமிழ்த் தேசிய அறிக்கை விடுகின்றார்.

தாம் தமிழ்த் தேசிய சிந்தனையைப் பாதுகாத்து வருவதாகவும் ஆட்சியில் பங்காளியாக இருப்பவர்கள் எதனையும் சாதிக்கவில்லை எனவும் குதர்க்கமான அறிக்கையை அவர் அண்மையில் வெளியிட்டிருக்கின்றார்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் ஜனநாயக மக்கள் முன்னணியில் தேசிய அமைப்பாளராக இருந்த போது கட்சியை வளர்த்தெடுத்ததையும் பல ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை முன்னின்று நடத்தியதையும் அப்போது அரசுடன் இருந்து தொடர்மாடி வீடுகளை கட்டி வர்த்தகம் செய்து சொகுசாக வாழ்ந்த குகவரதனுக்கு தெரிய நியாயம் இல்லை.

அப்போராட்டங்களின்போது ஜனநாயக மக்கள் முண்ணியுடன் இருந்த மேல்மாகாண சபை உறுப்பினர்களான குமர குருபரன், ராஜேந்திரன் மற்றும் பெரியவர் வேலணை வேணியன் போன்றவர்களிடம் அவர் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

இன்று கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கான அபிவிருத்தி அவிசாவளை, களுத்துறை மற்றும் கேகாலை மாவட்டம் போன்ற பகுதியில் உள்ள பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளுக்கான அபிவிருத்தி போன்றவற்றை அரசுடன் சண்டையிட்டு எவ்வித விளம்பரமுமின்றி செய்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனைப் பற்றி பேசுவதற்கு மேல்மாகாணசபை பதவிக்காக ஜ.ம.மு. தலைவர் மனோ கணேசனுக்கு காவடி தூக்கும் குகவரதனுக்கு அருகதை இல்லை - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இரக்கம் காட்டுமா இந்தியப் பேரரசு?

தமிழ் நாட்டில் மட்டுமன்றி தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் இன்று ஆர்வத்தோடும் ஆதங்கத்தோடும் பேசப்படுகின்ற விடயங்களில் ஒன்று பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்களில் ஒருவரான பேரறிவாளனின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தவரான உயர் அதிகாரி தியாகராஜன் என்பவர் அந்த வாக்கு மூலத்தைத் தாம் தவறான முறையில் பதிவு செய்ததாக வெளியிட்டுள்ள அறிக்கையாகும்.

இந்த வழக்கின் நடைமுறைகள் ஆரம்பம் முதற்கொண்டே தவறான வகையில் கையாளப் பட்டு வந்துள்ளதாக தமிழர் தரப்பில் கவலை இருந்து வருகின்றது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார் என்பதிலோ, அந்தக் கொலையைச் செய்தவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதிலோ எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. முக்கியமாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களான வே.பிரபாகரன், ச.பொட்டு அம்மான், ஒற்றைக்கண் சிவராசா மற்றும் தனு ஆகியவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்படாமலே விசாரணைகள் நடைபெற்று முடிந்தன. கொலையில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற முறையிலான சாட்சியங்களின் அடிப்படையில் பேரறிவாளன், சாந்தன், முருகன் மற்றும் நளினி ஆகியவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் நளினிக்கு மட்டும் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. இவ்வாறு தண்டனை பெற்ற வர்கள் பலவாறு மேன்முறையீடுகள் செய்தும், கருணை மனுக்களை முன்வைத்தும் விடுதலைக்கு வேண்டி நின்றார்கள். இந்திய அரசு இரக்கம் காட்டவில்லை.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் தாங்கள் தண்டிக்க விரும்பிய பிரபாகரன், பொட்டு அம்மான் போன்றவர்கள் கிடைக்கப்பெறாமை யால் சூழ்நிலையால் சிக்கிக்கொண்டவர்களை இந்திய அரசு குற்றவாளிகளாகத் தண்டித்துவிட்டது என்பதாக ஒரு கருத்து தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. இந்தக் கருத்துக்கு உரம் அளிப்பதாக இந்திய அரசின் புலனாய்வுத் துறையில் கைதிகளின் வாக்கு மூலங்களை பதிவு செய்தவரான தியாகராஜன் என்பவர் இப்போது திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பேரறிவாளனின் வாக்கு மூலத்தில் தாம் திருத்தம் செய்ததாக அவர் பகிரங்கமாக தகவல் வெளியிட்டிருப்பதானது, காலம் பிந்திவிட்டாலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அதனால் நீதி கிடைக்க வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

பொதுவில் குற்றவாளிகள் மீதான விசாரணைகளின் போது சாட்சியங்களில் பிறழ்வு ஏற்படும்போது அல்லது சந்தேகம் எழும்போது சந்தேகத்தின் அனுகூலம் (Benifit of the doubt) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு (பிரதிவாதி) சாதகமாகவே எடுத்துக்கொள்ளப்படுவது நீதிமன்றங்களில் கையாளப்படும் நடைமுறை மரபாக இருந்து வருகின்றது.

அம்மாதிரி சாட்சிய பிறழ்களின் காரண மாகவே சில தினங்களிற்கு முன் புதுச்சேரி நீதி மன்றம் காஞ்சி காமகோடிபீட சங்கராச்சாரியர் கள் மற்றும் 25 பேர்கள் மீதான சங்கரராமன் கொலை வழக்கில் அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

22 வருடங்களுக்கு மேலாக செய்யாத குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வருவதாக முறையிட்டு நிற்கும் பேரறிவாளன் முதலியவர்கள் மீதான தண்டனைகளை இப்போது குறித்த அதிகாரியின் (காலம் தாழ்த்தியதானாலும்) சாட்சியத்தை முன்வைத்து விடுதலை செய்வது பற்றி இந்திய பேரரசு ஆலோசிக்க வேண்டும். அவ்வாறு செய்வது இந்திய அரசின் மீது தமிழ்மக்கள் கொண்டுள்ள ஆத்திரம் குறைய வழிவகுக்கும்.

ராஜீவ் காந்தியின் கொலைக்கு பழிவாங்குவதற்காகவே இந்திய அரசு இலங்கைப் போரின்போது இலங்கை அரசுக்கு சாதகமாக செயல்பட்டது என்ற அபிப்பிராயம் மேலும் நீடிக்காமல் இருக்க இது உதவும் என்று கூறலாம். எதுவானாலும் நீதி நியாயங்கள் பற்றி உலகுக்கு உபதேசம் வழங்கும் பாரத தேசம் இந்த விடயத்தில் இப்போதாகிலும் தர்ம சிந்தையுடன் செயல்படும் என்று எதிர்பார்ப்போம்.

## மனித உரிமை மீறல்கள்

# வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்துமா?

எந்தவொரு நாடும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் போது, அவற்றை நியாயப்படுத்துவதற்காக மற்றைய நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்ட முயற்சிப்பது அல்லது பூகோள மூலோபாய பேரம் பேசலில் ஈடுடுவது என்பவை வழமையானதொன்றே.

மனித உரிமைகள் என்பது எப்போதும் வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் போட்டியிடுகின்ற ஒன்றாகக் காணப்படுகிறது. மனித உரிமைகள் என்பது வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தக் கூடாது என மூலோபாய வல்லுநர்கள் அறிவுறுத்துகின்றனர்.

உலக நாடுகள் தமது நாடுகளின் நலன்கள் மற்றும் அதிகாரங்களை மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என மூலோபாய வல்லுநர்கள் நம்புகின்றனர். இது உண்மையில் தவறான கருத்தாகும். நாடுகள் கொண்டுள்ள நலன்களுக்கு அப்பால், ஒரு நாட்டின் அதிகாரமானது சட்டத்தின் வழி இயங்குவதற்கான நெறிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும். இதற்காக, குறித்த நாடு மனித உரிமைக ளில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

### இந்தியாவின் மென்தீர்மான்

அண்மையில், இலங்கையில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களைக் கருத்திற் கொண்டு இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என இந்தியப் பிரதமருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனால் இந்திய அரசு இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தனது நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரை அனுப்புவதென ஒரு மென்மையான தீர்மானத்தை எடுத்தது. ஆகவே வெளியுறவுக் கொள்கையு டன் மனித உரிமைகள் கொண்டுள்ள உறவு எத்தகையது?

தமது நாடுகளின் இறையாண்மை தனித்துவமானது எனவும், பிரிக்கப் படமுடியாதது எனவும், தமது நாட்டிற்குள் என்ன நடந்தாலும் அது தொடர்பாக வெளித்தரப்பினரால் கேள்வி கேட்கப்படக் கூடாது எனவும் உலக அரசுகளும் அவற்றை ஆள்பவர்களும் கருதுகிறார்கள். எடுத்துக்காட்டாக, இலங்கையில் தொடர்ந்த உள்நாட்டுப் போரின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட போர் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எந்தவொரு நாடு குறிப்பாக இந்தியா தன்னிடம் கேள்வி கேட்கக்கூடாது என இலங்கை தற்போது நினைக்கிறது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தம்மிடம் வினவுவது, தமது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உலக நாடுகள் கருதுகின்றன. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசொன்று அச்சுறுத்தல் மற்றும் பிரிவினைகளிலிருந்து தனது நாட்டைப் பாதுகாப்பதற்காக மிகவும் மோசமான வன்முறைகளைப் பயன்படுத்த முடியுமா என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

### இறைமையும் மனித உரிமையும்

உலக நாடுகள் தமது நாடுகளின் இறைமையைப் பாதுகாப்பதற்காக மனித உரிமைகளை மறந்துவிட வேண் டுமா? தாம் விரும்பியவாறு தமது சொந்த மக்கள் மீது நாடுகள் வன் முறை களைக் கட்டவிழ்த்துவிட முடியுமா? இந்த இடத்தில் மனித உரிமைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றவை தொடர்பான விவாதம் எழுகின்றது. ஜேர்மனியைக் ஹிட்லர் ஆண்ட போது யூத மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டமையானது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகக் கருதப்பட்ட பின்னரே, மனித உரிமைகள் தொடர்பான எண்ணக்கரு பரந்தளவில் நோக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் முடிவ டைந்து உலக நாடுகளில் பல்வேறு துன்பியல் சம் பவங்கள் ஏற்பட்டபோது, இவ்வாறான இனப்படுகொலை இனியொரு போதும் இந்தப் பிரபஞ்சத்தில் நடந்தேறக் கூடாது எனச் சுட்டிக்காட்டப் பட்டு சிவில் உரிமைகள் தொடர்பான அனைத்துலகப் பிரகடனம் ஐ.நா சாசனத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என உலக சக்திகளால் முன்மொழியப்பட்டது.

வெவ்வேறு உலக நாடுகள் தமது நலன்கருதியும், கேந்திர மூலோபாய நலன்களை ஈட்டிக் கொள்வதற்காகவும் ஏனைய நாடுகளின் விவகாரங்களில் தலையீடு செய்து குறித்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கேள்வியெழுப்புகின்ற போது, மனித உரிமைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றவற்றின் வரையறைகள் தொடர்பில் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

### வேறுபடும் நீதியின் தராசு

சில நாடுகளில் இடம் பெறுகின்ற மனித உரிமை மீறல் களை உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் கவனத்திற்கொள்ளாத அதேவேளை, வேறு சில நாடுகளில் இடம்பெறும் மீறல்களைச் சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக, சிரியா மற்றும் ஈரானில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை கேள்வியெழுப்பிய அதே வேளையில், இவற்றின் கூட்டணி நாடுகளான சவுதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான் போன்றவற்றில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் பெண்கள் உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன் றவை கவனத்திற் கொள்ளவில்லை.

இவ்வாறான எடுத்துக்காட்டுக்களின் மூலம் உலகின் சக்தி மிக்க நாடுகளும் அமைப்புக்களும் மற்றைய நாடுகளின் மனித உரிமை மீறல் விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தும்போது அரசியல் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

### பேரம்பேசலில் மனித உரிமை

எந்தவொரு நாடும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும்போது அவற்றை நியாயப்படுத்துவதற்காக மற்றைய நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்ட முயற்சிக் கின்றது அல்லது பூகோள மூலோபாய பேரம்பேசலில் ஈடுபடுகின்றது என்பதே உண்மையாகும்.

எடுத்துக்காட்டாக, 1994-96 காலப் பகுதியில் செச்சினியாவில் பிரிவினைவாத அமைப்பொன்று உள்நாட்டுப் போருக்கான சூழலை உருவாக்கிய போது, ரஷ்யா, செச்சினியா மீது மிகப்பெரிய விமானக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது. இந்தச் சம்பவம் ரஷ்யா மனித உரிமை மீறல்களை மேற்கொண்டதை உறுதிப்படுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியன மிகவும் கடுமையாக விமர்சித்தன. ஆனால் அதற்குப் பின்னர், அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான போரை ஆரம்பித்தபோது ஆப்கானில் போரை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவுக்கு ரஷ்யா மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் ஆதரவு தேவைப்பட்டது. இந்த விடயத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் சமரசம் செய்துகொண்டதால் செச்சினியாவில் ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அமெரிக்கா கேள்வியெழுப்பாது நழுவியது.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக அவர்களது சொந்த நாட்டு அரசுகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. இந்தியா கூட தனது நாட்டில் செயற்படும் மனித உரிமையாளர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிப்பதாக குற்றம் சாட்டியுள்ளது. வாழ்வதற்கான உரிமை, விடுதலை, கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கான உரிமை, நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை மற்றும் ஏனைய எல்லாவிதமான அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகள் தான்.

சில சம்பவங்களின்போது இந்தியா மனித உரிமை மீறல்களை மேற்கொண்டமைக்கான சாட்சியங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இந்தியா பாதிக்கப்பட்ட நாடுகளில் பல்வேறு மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளது. இந்தியர்கள் வேற்று நாட்டவர்கள் தமது நாட்டில் இடம்பெறும் மீறல்கள் தொடர்பாகக் கேள்வி கேட்பதை விரும்பவில்லை. அதாவது இந்தியா தொடர்ந்தும் தனது நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மறைத்து வருகின்றது.

இந்நிலையில் இந்தியா, மற்றைய நாடுகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எவ்வாறு கேள்வி எழுப்ப முடியும்? இந்தியா, இலங்கை பெருமளவில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும், அங்கு இடம்பெற்ற போர்க்கால மீறல்கள் தொடர்பில் பதிலளிக்குமாறும் இலங்கை அரசு மீது ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை?

### உறுதியற்ற இந்தியக் கொள்கை

இந்திய அரசு, மற்றைய நாடொன்றின் மனித உரிமை மீறலைத் திருத்துவதற்காக தனது வெளியுறவுக் கொள்கையைக் கருதாது, வெளிப்படையாக அழுத்தம் கொடுத்தால் அது வர வேற்கத்தக்க விடயமாகும். இதன்மூலம் இந்த உலகம் பாதுகாப்பாக இருக்க முடியும். தமது சொந்த மக்கள் மீது அந்தந்த நாட்டு அரசுகள் இனப்படுகொலை மேற் கொள்வதை நிறுத்தி, தமது நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் உரிமை களைப் பாதுகாத்து, ஆரோக்கியமான நிறுவகங்களை அமைத்து இவ்வாறான உரிமைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை உறுதிப்ப டுத்துவதற்கான சுயாதீன நீதிச் சேவையை உருவாக்கினால், அனைத்துலகமும் பாதுகாப்பாகவும், சட்டத்திற்கு கட்டுப்படுவதாகவும் இருக்கும். இதில் இந்தியா நம்பிக்கை கொண்டால், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ஏன் உறுதிமிக்கதாக இருக்கமுடியாது? இதேவேளையில், பூகோள மூலோபாய நலன்களை ஈட்டிக் கொள்வதற்காக மனித உரிமைகளைப் பயன்படுத்துபவர்களை விமர்சிப்பதற்கு இந்தியா தயக்கம் கொள்ளக்கூடாது. இதற்கும் அப்பால், ஏனைய நாடுகளில் வாழும் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறு ஜனநாயக நாடுகளில் வாழும் மக்களால் அழுத்தம் கொடுக்க முடியும்.

ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையென்பது, அதன் கொள்கை வகுப்பாளர்களால் தெரிவு செய்யப்பட்ட மிகவும் வரையறுக்கப்பட்ட விடயங்களை மட்டுமே பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும். இந்தியா தனது அயல்நாடுகளுடன் எவ்வாறான உறவைப் பேணவேண்டும் என்பதை உயர் மட்டக் கொள்கை வகுப்பாளர்களாலேயே தீர்மானிக்க இயலும்.

*நன்றி-புதினப்பலகை*





# விற்பனையில் சாதனை படைத்துள்ள எக்ஸ் பொக்ஸ் வண் (Xbox one)

இப்பொழுது மைக்ரோசொப்ட் நிறுவனம் புதியதாக ஒரு கணினி விளையாட்டை (Game Gadget) வெளியிட்டுள்ளது.
இதன் பெயர் எக்ஸ் பொக்ஸ் வன்(Xbox one). இது வெளியான 24 மணிநேரத்தில் சுமார் ஒரு மில்லியன்கள்விற்பனையாகி உள்ளது. அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட டைட்டன் என்ற நிறுவனம் தான் இந்த எக்ஸ் பொக்ஸ் விளையாட்டை. வெளியிட்டுள்ளது.
விற்பனையில் சாதனை படைத்துள்ள எக்ஸ் பொக்ஸை, சிறுவர்கள் அதிகம் விரும்பி வாங்கி விடுவதால் இன்னும் பல்வேறு நாடுகளில் இதனை வெளியிடப் போவதாக மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது

# உலகிலுள்ள 50,000 இற்கும் மேற்பட்ட கணினி வலையமைப்புக்குள் ஊடுருவிய என்.எஸ்.ஏ. (NSA)

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனம் (என்.எஸ்.ஏ.) உலகிலுள்ள உள்ள சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கணினி வலையமைப்புக்களுக்குள் ஊடுருவி. நிறுவியுள்ளது.
இதன் மூலம் பல தகவல்களை இரகசியமாகத் திரட்டிக்கொள்வதே இதன் நோக்கமாகக் காணப்பட்டது என்று அமெரிக்காவை கதிகலங்கச் செய்துள்ள எட்வேர்ட் ஸ்நோடன் புதிய ஆதாரத்தை வெளியிட்டுள்ளார்.
இந்த செயற்பாடு தொடர்பான உலக வரைபடத்தை பவர்பொயின்ட் பிரசன்டேசன் வடிவில் கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து என்.எஸ்.ஏ. சேகரித்து வைத்துள்ளது. இதனைத் தற்போது டச்சு செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளதுடன், அந்நிறுவனத்தின் கேள்விகளுக்கும் பதிலளிக்காது அமெரிக்க அரசு மௌனம் காத்து வருகின்றது




இந்த செயற்பாடு தொடர்பான உலக வரைபடத்தை பவர்பொயின்ட் பிரசன்டேசன் வடிவில் கடந்த 2012ம் ஆண்டிலிருந்து என்.எஸ்.ஏ சேகரித்து வைத்துள்ளது.




# சாம்சுங்அறிமுகப்படுத்தும் மெகா 6.3 கைபேசி

## Galaxy Mega 6.3

பல்வேறு புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி தொடர்ச்சியாக பல ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் சாம்சுங் நிறுவனம், தற்போது சாம்சுங் கலக்ஸி மெகா 6.3 எனும் புதிய ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.
349 டொலர் பெறுமதியான இந்தக்கைபேசி 6.3 அங்குல அளவுடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன் கூகுளின் Androi-4.2.2 ஜெலி பீன் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. மேலும் Snapdragon 400 processor, 8GB சேமிப்புக் கொள்ளளவு, 3,200mAh மின்கலம் என்பனவற்றுடன் 8 மெகாபிக்சல் களை உடைய பிரதான கமரா மற்றும் 1.9 மெகாபிக்சல் களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

349 டொலர் பெறுமதியான இந்தக் கைப் பேசி 6.3 அங்குல அளவுடைய தொடு திரையைக் கொண்டுள்ளதுடன் கூகுளின் அன்ரோயிட் - 4.2.2 ஜெலி பீன் இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.



# 2TB கொள்ளவுடைய பிரத்தியேக சேமிப்பு நினைவகம் அறிமுகம்



கணினியில் சேகரிக்கப்பட்டிருக்கும் தரவுகளை பாதுகாப்புக் கருதி மீள் நினைவகமாக பிரதி செய்வதுவைத்திருப்பதுவழமையாகும். இதற்கு வெளியக நினைவகம் அல்லது பிரத்தியேக சேமிப்பு நினைவகங்கள் (External Storage) பயன்படுத்தப்படும்.
தற்போது LaCic நிறுவனம் 2ரிபி கொள்ளளவு உடைய சேமிப்பு நினைவகத்தை அறிமுகம் செய்துள்ளது.
இச்சாதனம் Thunderbolt, USB 3.0 இணைப்பியின் மூலம் கணினியுடன் இணைக்கக் கூடிய வாறு காணப்படுவதுடன் யு.எஸ்.பி. 3.0 இனூடாக 5Gb/s என்ற வேகத்திலும், Thunder bolt ஊடாக 10Gb/s என்றவேகத்திலும் தரவுப்பரிமாற்றம் செய்யக் கூடிய வாறு உருவாக்கப்பட்டுள்ளது.

# (நெப்ரியூன் பைன்) Neptune Pine ஸ்மார்ட் கடிகாரம் தற்போது (கிக்ஸ்ராட்டர்) Kickstarter




முதலாம் தலைமுறை (Neptune Pine) நெப்ரியூன் பைன் ஸ்மார்ட் கடிகாரம் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட் டிருந்தது. ஏனைய நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் கடிகாரங்களை விடவும் புதிய அம்சங்களை உள்ளடக்கியிருந்த இக்கடிகாரத்தின் அடுத்த தலைமுறையை வெளியிடும்பொருட்டு மேம்படுத்தல் திட்டங்களுக்காக Kickstarter தளத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
2.4 அங்குல திரை உடைய இந்த கைக்கடிகாரம் அன்ரோயிட் ஜெலி பீன் 4.1.2 இயங்குதளத்தில் செயற்படுவதுடன் இதில் 1.2Ghz Processor உள்ளடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




ஏனைய நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் கடிகாரங்களை விடவும் புதிய அம்சங்களை உள்ளடக்கியிருந்த இக்கடிகாரத்தின் அடுத்த தலைமுறையை வெளியிடும்நோக்கில் மேம்படுத்தல் திட்டங்களுக்காக Kickstarter தளத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

# நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் 2 ஆம் கட்டத்துக்கு தெரிவானோர்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு நடத்தப் பட்ட போட்டிப் பரீட்சையில் முதலாம் கட்டத்துக்குத் தகுதி பெற்று இரண்டாம் கட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்ற தகுதி யுடைய 4,595 பேரின் பெயர் விவரம் பரீட்சைத்திணைக்களத் தினால் அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள்சேர்ப்புச் செய் வதற்கு திறந்த நிலைப் போட்டிப் பரீட்சை முதலாம் கட்டம் அண் மையில் நடை பெற்றது. இதில் 30 வயதுக்கு உட்பட்ட தாரிகள் தோற்றினர்.

திறந்த நிலை மூலம் 25 வீதமானோர் ஆள்சேர்ப்புச் செய்யப்படுவர். இரண்டாம் கட்டமாக நடைபெறும் போட்டிப் பரீட்சைக்கு முதலாம் கட்டப் போட்டிப் பரீட்சையில் தகுதி பெற்றவர்கள் மட்டும் அனுமதிக் கப்படுவர். அதற்கான விண்ணப் பங்கள் கோரப்படவுள்ளன.

கடந்த காலங்களில் 60 புள்ளி களுக்கு மேல் பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த வருடம் அது 40 புள்ளி யாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் முதலாம் கட்ட போட்டிப் பரீட்சையில் 178 பேர் தகுதி பெற்று இரண்டாம் கட்டப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர். இதில் 52 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இரண்டாம் கட்டப் போட்டிப் பரீட் சையில் பெற்றுக் கொள்ளும் உயர்புள்ளிஅடிப்படையில்தேவை யான ஆளணியினர் தெரிவுசெய் யப்படவுள்ளனர். நேர்முகப் பரீட் சைக்குபுள்ளிகள்வழங்கப்படுவது இல்லை எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ந-11)

## ஆங்கில சொற்களஞ்சியப் போட்டி

தென்மராட்சி, நவ. 29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் 3, 4, 5 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர் களுக்கான ஆங்கில சொற்களஞ்சியப் போட் டிகள் நாளை சனிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச் சேரி இந்து ஆரம்பப் பாட சாலையில் நடை பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.03.1943

மறைவு 01.12.2010

திருமதி

இராஜேஸ்வரி சந்திரசேகரம்

திதி : கார்த்திகை அபர பக்க தெசமி (29.11.2013)

ஆண்டுகள் மூன்று ஆனாலும்,
ஆறாது உங்கள் நினைவுகள்.

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(40535 (7.6.3)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.03.1956

மறைவு 05.12.2007

அமரர்

கா. குலசிங்கம்

(செந்தா பஸ் உரிமையாளர்)

திதி – ஏகாதசி

தரணியில் வந்துதித்த தாயுமானவரே
பரணியில் எம்மை பரிதவிக்க விட்டுப் போனதென்ன
ஆண்டுகள் ஆறு ஆனபோதும்
ஆழிபோல் உங்கள் நினைவுகள் அலைபோல் அடிக்கிறது.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(39796) (7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வைத்திலிங்கம் தியாகராஜா

(இளைப்பாறிய ஆசிரியர்,
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)



மண்ணில் 23.10.1930

விண்ணில் 10.12.2012

திதி: 29.11.2013 துவாதசி

ஆலமரம் பாறி ஆண்டொன்று ஆனதோ!
புதுவைக் கலைவானில் நின்றொளிர்ந்த கலைமதியே!
பொதுப் பணி என விதைத்த தியாகராஜா அருள் நிதியே!
அன்பின் திருவுருவே! அமைதியின் பெட்டகமே!
மங்காத மணிவிளக்கே! மறைந்ததோ ஓராண்டு.
அன்பினை மெழுகாக்கி அறிவினைத் திரியாக்கி
அகமகிழ மக்கள் வாழ்விற்கு ஒளியூட்டி
அன்பொடு பண்பை அள்ளியெடுத்திட்ட
அறிவுச் சுடரே! ஆண்டொன்று ஆனதோ!
மனிதம் நிறைந்த மாமணியே! மானிடம் வெறுத்ததோ!
கடமை உணர்ந்த காவியமே! எம்மை இன்று மறந்ததோ!
வற்றாத பெருங்கடலே! வானுலகு சென்றாலும்
மண்ணாற மீண்டும் வரவேண்டும் தந்தையே!

நின் ஆத்ம சாந்திக்காய் அங்கலாயும்...
சத்தியபாமா ஸ்ரீகரன் குடும்பம்,
சிவானந்தராஜா குடும்பம்,
பாஸ்கரராஜா குடும்பம்,
சிவசோதிராஜா குடும்பம்,
சிவநேசராஜா குடும்பம்,
ரவீந்திரராஜா குடும்பம்,
பேரப்பிள்ளைகள்.

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(40517)(12)(6)

**வாகனம் விற்பனைக்கு**

GF xxxx Dolphin Van
விற்பனைக்குண்டு.



தொடர்பு : 077 450 2567 (40546) (7.6.3)

**விற்பனைக்கு**

Bajaj Discovery 100cc NP WN-xxxx
இலக்கமுடைய மோட்டார் சைக்கிள்
விற்பனைக்குண்டு. (சி/13856)

தொடர்பு : 077 153 0982 (7.6.3)

**கடை வாடகைக்கு**

கே.கே.எஸ் வீதியில் பூநாறி மரத்தடிக்கும் அரசடிக்கும் இடையில் 11' நீளம் 16' அகலம் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.

(40511) (4.6.3)

தொடர்பு:077 711 0812

**வீடு வாடகைக்கு**

யாழ்.கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலுக்கு முன்பாக சகல வசதிகளையும் கொண்ட மூன்று அறை கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு : 077 978 9296 (40543) (7.6.3)

## மரண அறிவித்தல்

சண்முகம் தவபாலன் (தவம்)



திருநெல்வேலி, பத்திரகாளி கோயி லடியைப் பிறப்பிடமாகவும், மாதனை, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் தவபாலன் (தவம்) கடந்த 26.11.2013 அகாலமரணமானார்.

அன்னார் கௌரி அம்பாளின் அன்புக் கணவரும், பத்மசீலனின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40544) (12)(6)

நாவலடிலேன்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

**இணையற்ற சேவையினூடு....**

50 ஆவது ஆண்டை நோக்கி
சான்றுகளுடன் சாதனைகள் படைக்கும்
வடமாகாணத்தின் முதற் தர நிறுவனத்தில்

புதிய கல்வி ஆண்டிற்கான

தரம் 01 முதல் O/L வரை

தமிழ் / ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

Dec 07 இல் ஆரம்பமாகின்றன

அனுமதிக் கட்டண சலுகைகளுடன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

அமைதியான சூழல்
அடிப்படை வசதிகள் அனைத்துடனும்
அனுபவமிக்க ஆசிரியர்களின் உயர்ந்த சேவை

மழலைப் பூங்கா முன்பள்ளியின்
2014 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன

(சி.13857)(6)

The Express Institute
Irupalai Junction, Kopay

## கண்ணீர் அஞ்சலி



செல்வி **கந்தையா பற்குணசோதி** (கலா)

(யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய ஆசிரியை)

கற்ற மாணவர் கதிகலங்க
கற்பிக்கும் சகபாடிகள் விழிகலங்க
காலனவன் கண் பட்டதோ

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்,
அதிபர் ,ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

## தவறிவிட்டது

உரும்பிராய் தெற்கு, செல்வபுரத்தைச் சேர்ந்த ந. குணேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல. (952293176V) கோண்டாவில் சந்திக்கும் கோண்டாவில் டிப்போவிற்கும் இடையில் தவறிவிட்டது.

தொடர்பு : 077 941 7203 (40613)
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்) (7.6.3)

# வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி

# 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தை, கோழிக்கடைகள், கருவாட்டுக்கடை என்பவற்றை 01.01.2014 - 31.12.2014 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் தவிர) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு (வற் தவிர) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வற் தவிர) |
|---|---|---|---|---|---|
| நெடுங்கேணி | 1 | நெடுங்கேணி மாட்டிறைச்சிக் கடை (நெடுங்கேணிகொல் களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 2000.00 | 5000.00 | 440000.00 |
| | 2 | நெடுங்கேணி மீன் சந்தை | 2000.00 | 5000.00 | 80000.00 |
| | 3 | நெடுங்கேணி கோழிக்கடை | 2000.00 | 5000.00 | 50000.00 |
| | 4 | நெடுங்கேணி மரக்கறி சந்தை மண்டபம் | 2000.00 | 5000.00 | 100000.00 |
| கனகராயன்குளம் | 1 | கனகராயன்குளம் மாட்டிறைச்சிக் கடை (தற்காலிக ஏற்பாடாக நெடுங்கேணி சூடுவெந்தான் கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 2000.00 | 5000.00 | 400000.00 |
| | 2 | கனகராயன்குளம் கோழிக்கடை | 2000.00 | 5000.00 | 50000.00 |
| | 3 | கனகராயன்குளம் கருவாட்டுக்கடை | 2000.00 | 5000.00 | 30000.00 |
| | 4 | கனகராயன்குளம் மரக்கறி சந்தை | 2000.00 | 5000.00 | 70000.00 |
| | 5 | கனகராயன்குளம் மீன் கடை | 2000.00 | 5000.00 | 50000.00 |

1. **கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** 29.11.2013 - 18.12.2013
2. **கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல்** 18.12.2013 பி.ப 02.00 மணிவரை
3. **கேள்விப் பத்திரம் திறக்கப்படும்** 18.12.2013 பி.ப 2.30 மணிக்கு
4. கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "**தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி**" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரை யிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா**" என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களினால் ''தவறுனராகக்'' கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. தெரிவுசெய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்திதரக்கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 2/3 பங்குத் தொகையை 20.12.2013 ஆம் திகதி செலுத்தி அன்றைய தினமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 1/3 தொகையினை 30.08.2014 இற்கு முன்னர் மாதாந்தம் சமதொகைகளாக 05ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
8. இறைச்சிக்காக கன்று ஈனக்கூடிய பசுக்களை அறுப்பது தடைசெய்யப்படும். எனினும் கன்றுஈன முடியாத பிரயோசனமற்றது என மிருகவைத்தியர் ஒருவரால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மாடு அறுப்பதற்கு அனுமதி வழங்க முடியும்.
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கும், எந்தவோரு கேள்வியும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ, அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. மரக்கறிச்சந்தை மண்டபம் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர் கொண்டுவரும் பொருள்களில் விற்பனை விலையில் 4% இற்குமேல் வரிஅறவிடக் கூடாது.
12. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
13. கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப்பொறுப்பாளியாவீர்கள்.
14. நெடுங்கேணி சந்தைவளவினுள் மரக்கறி விற்பனைக்காக வழங்கப்பட்ட, வழங்கப்பட இருக்கின்ற கடைகள் மீது மரக்கறி மண்டப குத்தகையாளர் எதுவித தாக்கமும் ஏற்படுத்த முடியாது.
15. நெடுங்கேணி மரக்கறிசந்தைக்கு உற்பத்தியாளரால் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்தி பொருள்களின் நிறையில் கழிவுகள் எதனையும் குத்தகையாளரால் விதிக்க முடியாது.
16.

**மு. பாலசுப்பிரமணியம்**
**தவிசாளர்**
**வவுனியா வடக்கு, பிரதேச சபை.**
**நெடுங்கேணி.**

(C/14201)(10.6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சுசீலா செல்வராசா J.P.

(பிரதி அதிபர் யா/ நாவற்குழி ம.வி.)

எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சு.செல்வராசா 27.11.2013 ஆம் திகதி முதல் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். அவரின் சிறப்பான சேவை சமூகத்திற்கு கிடைக்க இறையருள் வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/நாவற்குழி மகா வித்தியாலயம். (40612)(2.6)

நியூ யாழ் வைத்திய சாலையில் புதிய அத்தியாயம்

யாழ் போதனா வைத்தியசாலையின் பிரபல நரம்பியல் நிபுணர் இப்போது இங்கும் தினசரி வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் வழங்குகிறார்.

குறிப்பு:
தலைவலி, கைகால் விக்கம், மறதி நோய், பாரிசவாதம்;
வலிப்பு, நரம்புத் தளர்ச்சி, தசை நோய்கள், தலைச் சுற்றல்
மற்றும் தலை சம்பந்தபட்ட நோய்கள்

NEW YARL HOSPITAL
315, Palaly Road, Parameswara Junction, Thirunelvely, Jaffna.
T.P: 021 222 3533, 021 222 1011
(C/14204)(10.14)

## கண்ணீர் அஞ்சலி

வரணி இடைக்குறிச்சி கிழக்கைச் சேர்ந்த

**கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி** அவர்கள்

26.11.2013 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் இயற்கை எய்தினார். அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருத்தத்துடன்
பிரம்மஸ்ரீ இ.குகதாசசர்மா குடும்பம்
வரணி சாவிலிப்பிட்டி கந்தசாமி கோயில், இடைக்குறிச்சி.
(C/14205

## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி மயில்வாகனம்**

(மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் ஊழியர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் நேற்று (28.11.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வரட்ணம், சிவபாக்கியம் காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.11.2013) வியாழக்கிழமை மாலை பக்கஸ்லேன் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பக்கஸ் லேன் மானிப்பாய் லலிதாம்பிகை (மருமகள்)

## மரண அறிவித்தல்

**கணபதி சின்னத்துரை**



(ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)

சண்டிலிப்பாய் கராச்சடியைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னத்துரை நேற்று முன்தினம் (27.11.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பூரணம் தம்பதியரின் மருமகனும், புஸ்பலீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரனும், புவனேசராசா, ஜாக்ளின் ஜென்சி, ஜாக்ளின் டல்சி, ரஞ்சன், டொனால் சாள்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, குணரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் குகதாசன், விமலதாசன்,தேவதாசன், தங்கராசன், அருமைநாயகி சௌந்தரராசன், லோகதாசன், தர்மஸ்ரீ, காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் றெசிநாயகி, விக்னேஸ்வரன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.11.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மல்வம் திருக்குடும்பமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
உடுவில். (31045) (10,16,14)

தகவல்: மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நாடக நூல் அறிமுகமும் குறும்பட வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.29
க.இ.கமலநாதனின் "முது சொம்" நாடக நூல் அறிமுக விழாவும் 'கூலி' குறும்பட வெளியீடும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-14)

## அரியாலையில் நாளை முன்பள்ளி சிறாரின் கலைவிழா

அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா நாளை சனிக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.
நோர்வே வாழ் நிலைய அங்கத்தவர்களின் அனுசரணையில் நிலையத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் கலைவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் பொ.கனகரத்தினம் தம்பதிகளும், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை ம்காமையாளர் க.றமேஸ்நேசனும் கலந்து கொள்வர்.
அதேவேளை அமரர் க.செல்வராசாவின் ஞாபகார்த்தமாக பிரித்தானியா வாழ் நலன் விரும்பிகளின் அனுசரணையில் அமைக்கப்பட்ட தொங்கு பாலமும் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-135)

# வடக்கு மாகாணத்தின் முதலாவது ஓவியக் கூடம் ஞாயிறன்று திறப்பு



ஐம்பது ஆண்டுகளை நோக்கிய திருமறைக் கலாமன்றத்தின் கலைப் பயணத்தில் மற்றுமொரு சாதனைத் தடமாக 286, நக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தின் முதலாவது ஓவியக் கூடத்தை தன்னகத்தே கொண்டமைந்துள்ள "கலைத் தூது கலாமுற்றம்" நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி, வத்திக்கான் தூதுவர் மேதகு பேராயர் யோசப் ஸ்பிற்றறி அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.
ஈழத்தின் ஓவியக் கலையின் மேம்பாட்டில் திருப்பு முனையாக அமைகின்ற கலைத்தூது கலாமுற்றத்தின் திறப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண சபை உறுப்பினர் இம்மானுவல் ஆனல்ட், பன்னாட்டு கட்டட திரைப்படக் கலைஞர் நவீன் குணரட்ன, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி வி.பி.சிவநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.
அருளுரைகளை யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமல தேரர், மௌலவி எம். ஐ.மஷ்மூத், அருள்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் வழங்குவார்கள்.
கலைத்தூது கலாமுற்றத்தின் திறப்பு விழாவை முன்னிட்டு காலை 6.30 மணிக்கு பாற்பொங்கல் நிகழ்வும், காலை 9 மணிக்குறக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசம்மாள் ஆலயத்தில் திருந்தந்தையின் பிரதிநிதி தலைமையில் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.
திறப்பு விழாவைத் தொடர்ந்து ஈழத்து ஓவியர்களின் ஓவியக் காட்சி ஆரம்பமாகி தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ஒ)

## அறவழியில் பொருளும் இன்பமும்

பொருளுக்குத்தான் உலகில் அதிக மதிப்பு. இதைக் கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக் கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்ட வேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக்கூடாது. பிறரை அழ வைத்துச் சம்பாதித்தால், சம்பாதித்தவன் அழ அழ அவன் கையை விட்டு அது போய்விடும். அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்க வேண்டும். ஒரு வனுக்கு நாலணா கொடுக்கிறோம்




அதைப் பெற்றுக் கொண்டவன், ஒரு கத்தரிக்கோல் வாங்கி ஊரார் பையெல்லாம் கத்தரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்ததும் வீணாகிவிடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்க வேண்டும். இன்பம் கூட தாலி கட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்க வேண்டும். தவறான வ்ழியில் வருகின்ற இன்பமாக இருக்கக் கூடாது.

நன்றி ஞானச்சுடர்

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



தென்மராட்சி, நவ.29
சாவகச்சேரி நுணாவில் மத்தியைச் சேர்ந்தவரும் ஈழ ஏதிலிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளருமாகிய துரைராஜா கந்தசாமி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி செ.லெனின் குமார் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண் டார். அவர் சீநோர் உற்பத்தி முன்னாள் முகாமையாளராகவும் படகு கட்டுமானப் பொறி யிய லாளராகவும் பணியாற் றியமை குறிப்பிடத் தக்கது. (வ-9)

# வீதி விபத்துகளில் 4 பேர் காயம்

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் சிக்கி பாடசாலை மாணவி உட்பட 4 பேர் காயமடைந்தனர். காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் வயோதிபர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.
சாவகச்சேரி பெரிய அரசடி ஏ-9 வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் வயோதிபத் தம்பதியும், இளைஞரும் காயமடைந்தனர். சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை நடராசா (வயது-73) அவரது மனைவியான நடராசா பரஞ்சோதி (வயது -70) ஆகியோரும், மீசாலையைச் சேர்ந்த திரவியம் தீபரதன் (வயது-27) ஆகியோரே இதன்போது காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளுடன் நாய் மோதியதில் அதில் பயணித்த பாடசாலை மாணவி தூக்கி வீசப்பட்டார். காயமடைந்த மாணவி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். (வ-9)

**பணிப்பெண் தேவை**
மாநகர சபை எல்லைக்குள் உள்ள வீடொன் றில் தங்கி நின்று வேலை செய்யவதற்கு குடும்ப பொறுப்பற்ற பணிப்பெண் தேவை.
தொ.பே: 075 210 2485 (40607) (7.6.3)

# செயலமர்வுகள் நாளை ஆரம்பம்

தென்மராட்சி, நவ.29
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அபிவிருத்திக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
தென்மராட்சி கல்வி வலயம் அடுத்த வருடம் மாதிரிக் கல்வி வலயமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள், முகாமைத்துவ குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு திட்டம் தொடர்பான செயலமர்வுகள் வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவுள்ளன.
சாவகச்சேரி பிரதேச பாடசாலைகளின் குழுக்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட வுள்ளது.
கொடிகாமம் பிரதேச பாடசாலைகளின் குழுக்களுக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில், கைதடிப் பிரதேசத் துக்கு கைதடி முத்துக் குமராசாமி ம.வி. யிலும், மட்டுவில் பிரதேசத் துக்கு மட்டுவில் சந்திர ரஸ்கந்தவரோதய ம.வி. யிலும், வரணிப் பிரதேசத்துக்கு வரணி ம.வி. யிலும், உசன் பிரதேசத் துக்கு உசன் இராமநாதன் ம.வி. யிலும் செயலமர் வுகள் நடத்தப்படவுள்ள தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந- 9)

## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகை பயிற்சியும்

சங்கானை பிரதேச செயலக பிரிவில் சுழிபுரம் கிழக்கு பிரதேசத்தில் ஜே/174 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடர் முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என்றும்- இது தொடர்பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்பதால்எவரும்குழப்பமடையத் தேவையில்லை என்றும் யாழ். செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சங்காபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம், நவ.29
வரணி விக்கிரமா குளம் விக்னேஸ் வரப் பிள்ளையார் ஆல யத்தின் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
ஆலயத்தின் கும்பாபிஷேகம் கடந்த 15 ஆம் திகதி நடை பெற்றதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகப் பூசைகள் [illegible] பெற்று வருகின்றமை கு[illegible]ப்பிடத் தக்கது. (வ-122)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 04 . 1928 — மறைவு 16 . 12 . 2006



அமரர் நல்லதம்பி கணேசன்
எமது குல விளக்கின் ஆத்மா சாந்திபெற வாரிவளவு கற்பக விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.
9/5, கோபால் லேன், யாழ்ப்பாணம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(40546)(10.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி (தேவி) வீரசிங்கம்



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி வீரசிங்கம் 26.11.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் (முன்னாள் லொறி சாரதி, சாவகச்சேரி MPCS) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருட்பிரகாசம் (முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத் தாபனம்) அவர்களின் அன்புச் சகோதரியும், தர்மினி (ஜேர்மனி), லக்ஷி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வின்சனா (ஜேர்மனி), விஸ்னா (ஜேர்மனி), சறோன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2013) வெள்ளிக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்,
தர்மினி (ஜேர்மனி),
லக்ஷி (பிரான்ஸ்)
0770761792

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(40610) (12)(6)

## வடபிராந்திய பாரவூர்தி(லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் வாக்களிக்கத்தகுதியுடைய வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

வடபிராந்திய பாரவூர்தி(லொறி) உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்கள் பட்டியல் இன்று 29.11.2013ஆம் திகதி முதல் 12.12.2013ஆம் திகதி வரை சங்கத்தின் தலைமை அலுவலகம், 155ஆம் கட்டை, கிளிநொச்சியிலும், சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம், திருமுறிகண்டியிலும் மற்றும் வவுனியா லொறிச் சேவைகள் சங்கத்திலும் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பாக அங்கத்தவர்கள் நேரடியாக விவரங்களைப் பார்வையிட்டு ஏதேனும் விவரங்கள் உட்படுத்தப்படாமலோ அன்றேல் திருத்தப்பட வேண்டி இருப்பின் அவை தொடர்பான முறைப்பாடுகளைச் செயலாளரின் கவனத்துக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுமாறும் இந்தக் காலப்பகுதிக்குப் பின்னர் தங்கள் முறைப் பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது இருக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(சி/13862) (7.6.3)

கோ.கஜேந்திரசிங்கம்
உபதலைவர்,
வடபிராந்திய பாரவூர்தி உ.கூ.சங்கம்

ப.மலர்வதனி
செயலாளர்,
வடபிராந்திய பாரவூர்தி உ.கூ.சங்கம்

## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை கருணாநந்தன் [மணியண்ணை]



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், சடச்சப்பை வித்தகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை கருணாநந்தன் 28.11.2013 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் கௌரியின் அன்புக் கணவரும், தினுசாவின் (மாணவி-வேம்படி மகளிர் உ.த.பாடசாலை) பாசமிகு தந்தையும், கந்தசாமி (ஓய்வுபெற்ற ஊழியர் தபாலகம்),கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமாரதாசன் (பெற்றோலியம் கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை), இளங்கோ, அனுசாதேவி, அருந்தவநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் மகாஜனக் கல்லூரி அருகில் செருக்கப்புலம் அம்பனையிலுள்ள அவரது சகோதரனின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொப்பளாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செருக்கப்புலம்,
அம்பனை, தெல்லிப்பழை.
(40611)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.




அச்சுவேலியில் புதிதாக உருவாக்கப்பட்டு செயற்பட்டு வரும் அச்சுவேலி ஆரம்பப் பாடசாலைக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியில் கல்வி கற்று தற்போது வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர் இருவரால் வழங்கப்பட்ட பெயர் முகப்பு வளைவின் தோற்றத்தைக் காணலாம். (ஓ-11)

# கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் 11 ஆவது திருக்குறள் மாநாடு

கிளிநொச்சி, நவ.29

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் 11 ஆவது திருக்குறள் மாநாடு அடுத்த மாதம் 02 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சி நண்பர்கள் விருந்தக மண்டபத்தில் திருக்குறள் கருத்தரங்கும், பிற்பகல் 1.30 மணியளவில் திருவள்ளுவர் விழாவும், பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன.

திருக்குறள் கருத்தரங்கு நிகழ்வு க.கனகசிங்கம் தலைமையில் இடம்பெறும். இதில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.சிறிநிவாசன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அரச அதிபரும், மகாதேவா சைவச்சிறார் இல்லத் தலைவருமான தி.இராசநாயகம் , கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பிறேமா மதுரநாயகம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் திருவள்ளுவர் விழா மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு வே.இறை பிள்ளை தலைமையில் இடம் பெறும். இதில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி அருளானந்தன், யாவிசு. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், வவுனியா மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் ச.சத்தியமூர்த்தி , இலங்கை வங்கி கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

# 'பச்சிலை' நூல் வெளியீடு இன்று

பளை, நவ.29

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் 'பச்சிலை' நூல் வெளியீடும் பரிசில் வழங்கலும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நூலக மண்டபத்தில்இடம்பெறும்.

பிரதேச சபைத் தலைவர் பெ.டொ.அன்ரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.பிரபாகரன், பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பளை கோட்டக் கல்வி அலுவலர் சு.ஆனந்தசிவம், பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி ஆர்.டி ஏ.ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கடந்த தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பளைப் பிரதேச மாணவர்கள் கௌரவிப்பு, தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலை மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் ஆகியவையும் இடம்பெறும்.

அதனை அடுத்து 'பச்சிலை' என்னும் சஞ்சிகை வெளியீடும் இடம்பெறும். கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல்பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் சஞ்சிகை வெளியீட்டில் முதல் பிரதியை ஜெயரத்தினம் பெற்றுக் கொள்வார். (வ-9-155)

# மரங்கள் அழிக்கப்படுவதை உடனே தடுத்து நிறுத்துக

*வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்*

அக்கராயன். நவ,29

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மரங்களை அழிக்கும் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் கமல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மரங்கள் தொடர்ந்து அழிக்கப்படுமாயின் பெருமளவு பாதிப்புக்கள் ஏற்படுமெனவும் அவர் அங்கு எடுத்துரைத்தார்.

குறிப்பாக வன்னேரிக்குளம் போன்ற கிராமங்களில் பெருமளவு மரங்கள் அழிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர் இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். (க-18)

# நெற்செய்கை பாதிப்பு; கிடைக்குமா நட்டஈடு?

*அங்கலாய்க்கும் யாழ்.மாவட்ட விவசாயிகள்*



வலி.வடக்கு. நவ.29

யாழ்.மாவட்டத்தில் பெரும் போகச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் மழையில்லாததால் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக அங்கலாய்க்கின்றனர். இதனால் அதற்கான நட்டஈட்டை அரசு வழங்குமா என கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த மாதங்களில் பெய்த மழையை நம்பி நெல் விதைப்பில் ஈடுபட்டவர்களின் பயிர்கள் வளர்ந்து வந்த போதிலும் உரம் போட்டு அவற்றைச் சீர் செய்ய முடியாத நிலைமையில் காணப்படுகின்றது. குறிப்பாக இந்தக் காலப் பகுதியில் நெற் பயிர்கள் கதிர்விடத் தொடங்கும் காலம். உரிய முறையில் மழை பெய்யாமை மற்றும் அடிக்கட்டுப் பசளை முழுமையாகப் போடப்படாமை போன்ற காரணங்களால் நெற்பயிர்கள் கதிர் விடாத நிலையில் காணப்படுகின்றன.

இனிவரும் காலத்திலாவது பெரியளவில் மழை பெய்து வயல்களில் போதிய வெள்ளம் நின்றாலும் பசளையிட்டாலும் கிடைக்கப்போகும் பலன் பத்து முதல் இருபது வீதத்துக்கு உட்பட்டதாகவே இருக் கும்.

இதனால் உரிய பயனை அடைய முடியாது என்று நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (வ-86)

# தென்பகுதி மருத்துவர்களால் நோயாளிகளுக்குப் பாதிப்பு

*மாங்குளம் பிரதேச மக்கள் விசனம்*

முல்லைத்தீவு, நவ.29

மாங்குளம் ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதில் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த மருத்துவமனையில் மூன்று தென்பகுதி மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் மாதத்தில் 10 நாள்கள் மட்டுமே மருத்துவமனையில் கடமையாற்றுவதாகவும், ஏனைய நாள்களில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று விடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த மருத்துவர்கள் சொந்த இடங்களிலிருந்து திரும்பியதும் தமது சொந்த வேலைகளில் பல மணி நேரத்தைச் செலவிடுவதாகவும் நோயாளர்களைக் க்வனிப்பதில்லை எனவும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். வெளிநோயாளர்கள் அதிக நேரம் கால்கடுக்க நிற்க வேண்டிய அவலநிலை காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 22 ஆம் திகதிகூட பல மணித்தியாலங்களுக்குப் பின்னரே மருத்துவர்கள் நோயாளர்களைப் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வகையிலும் பாதிப்புக்களை எதிர்கொண்டு அவல வாழ்வு வாழும் தமக்குரிய வைத்திய சிகிச்சைகளையாவது உரிய வகையில் வழங்குமாறு இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

"..."

கடந்த 22 ஆம் திகதிகூட பல மணித்தியாலங்களுக்குப் பின்னரே மருத்துவர்கள் நோயாளர்களைப் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நெத்தலியாற்று நீரை பயனுள்ளதாக்கத் திட்டம்

கிளிநொச்சி, நவ.29

கிளிநொச்சியிலுள்ள நெத்தலி ஆற்றின் நீர் கடலில் வீணாகக் கலப்பதைத் தடுக்கும் வகையில் நீர்ப்பாசனத்திணைக்களத்தினர் திட்டங்களை வகுத்து வருவதாகத் தெரிய வருகின்றது.

தற்போது நெத்தலி ஆற்றின் நீர் பயனற்ற வகையில் கடலில் கலப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த நீரை இங்குள்ள சிறு குளங்களுக்குத் திருப்பி விடுவதன் மூலமாக சுமார் 5,200 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கையை மேற்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் ,கல்மடுக் குளத்தின் அணைக்கட்டை இரண்டு அடியாக உயர்த்தி மேலதிக நீரைச் சேமிப்பதன் மூலமாக நீர் உரிமம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு நீரை வழங்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கல்மடுக் குளத்தின் கீழ் பாய்கின்ற நெத்தலியாற்றின் நீரை வேறு சிறு குளங்களுக்குத் திருப்பி விடுவதன் மூலமாக விவசாயிகள் அதிக நன்மை பெற முடியும்.

தற்போது தருமபுரம் மேற்கு, புளியம் பொக்கணை ஆகிய இடங்களிலுள்ள பெருமளவு விவசாய நிலங்கள் நீர் கிடைக்காததால் தரிசு நிலங்களாக மாறிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



சாவகச்சேரி பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள வரணி பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வின்போது வரணி இயற்றாலையைச் சேர்ந்த குறித்த நூலக அபிவிருத்திச் சபை உறுப்பினர் சி.கணபதிப்பிள்ளை நூலக பயன்பாட்டுக்கென தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். (வ-122)

# மேய்ச்சல் தரவைகள் இல்லாததாலேயே கால்நடைகள் பச்சிலைப்பள்ளிக்கு செல்கின்றன

கிளிநொச்சி, நவ.29

கண்டாவளையில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாகவே தமது கால் நடைகள் பச்சிலைப்பள்ளிப் பகுதிக்குச் செல்வதாககால்நடைவளர்ப்பாளர்கள் தெரி விக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சல் தரவைகள் காணப் படாததால் தாம் இடர்களை எதிர்கொள்வதாகவும் கால் நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்கு கண்டாவளையிலிருந்து கால்நடைகள் செல்வதற்கு மேய்ச்சல் தரவைகள் இல்லாமையே முக்கிய காரணம் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் தரவைகளுக்குரிய நிலங்களில் படைமுகாம்கள், மக்கள் குடியிருப்புகள் என்பன காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



# மருத்துவமனையை அமைக்க மாகாணசபை உதவவேண்டும்

*கிளிநொச்சி சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு*

அக்கராயன், நவ.29

கிளிநொச்சி ஜெயபுரம் கிராமத்தில் மருத்துவமனை அமைக்கும் பணிகளை வடமாகாண சபை மூலமே மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிப்பாளர் பா.கார்த்திகேயன் தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெயபுரம் கிராமத்தில் மருத்துவமனை அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

மருத்துவமனைக்குரிய நிதியை வடமாகாண சபையே வழங்க வேண்டும்.

1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜெயபுரம் கிராமத்தில் 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் மருத்து வமனை இல்லாத கிராமமாக இது இருக்கின்றது.

எனவே வடமாகாண சபையே இங்கு மருத்துவமனையை அமைக்க உதவி செய்ய வேண்டும்- என்றார். (எ-18)

# போரின் இழப்பு கணக்கெடுப்பு

## தகவல்களை வழங்கி பொதுமக்களை ஒத்துழைக்க கோருகிறது குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம்

கொழும்பு,நவ.29

30 வருட காலம் நடைபெற்ற போரின்போது ஏற்பட்ட மனித உயிரிழப்பு, பொருள் இழப்பு, காணிகளுக்கு ஏற்பட்ட சேதம் ஆகியவை குறித்த மதிப்பீட்டை நாடு முழுவதும் மேற்கொள் வதற்கு குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த மதிப்பீடு எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் செய்து முடிக்கப்பட வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இத்தகைய ஆய்வொன்றை நாடெங்கும் நடத்த வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது.

ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தலைமையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயலணி ஒன்று நியமிக் கப்பட்டிருந்தது.

இந்த செயலணி தேசிய நட வடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்து, இந்தக் காலப் பகுதியில் நாடெங்கிலும் இடம் பெற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், அதனால் எத்தகைய சூழ்நி லையில் உயிரிழப்புகள் ஏற்பட் டன, பொதுமக்கள் எவ்விதம் காயமடைந்தார்கள், அவர்க ளின் சொத்துக்கள் எவ்விதம் போரால் அழிவுற்றன போன்ற விவரங்களை திரட்டுவதற்கு நிபுணத்துவர்களைக் கொண்ட குழுவினரால் ஆய்வு நடத்து வதன் அவசியத்தை வலியுறுத்தியது.

அதனடிப்படையில் நாடெங்கும் கடந்த 30 ஆண்டுகால போரால் உயிரிழந்தவர்கள், காணாமல் போனவர்கள், காயமடைந்த வர்கள், ஊனமுற்றவர்களின் விவரங்களையும், சொத்துக் களுக்கு ஏற்பட்ட அழிவுகள் பற்றிய விவரங்களையும் திரட் டுவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களமும் கூட்டாக மேற்கொள்ளவுள்ளன.

இந்த ஆய்வுகள் கிராம அலு வலகர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படும். கிராம அலுவலர் நியமிக்கும் கணக்கு சேமிப்பவர்கள் மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வு 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளில் நாடெங்கிலும் 16 ஆயிரம் உத்தியோகத்தர்களின் பங் களிப்புடன் மேற்கொள்ளப்படும் என்று குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் டி.சி.ஏ. குணவர்தன கூறினார்.

கடந்த 30 ஆண்டு காலத்தில் இடம்பெற்ற உயிரிழப்பு, பொருள் இழப்பு பற்றி குடும்ப மட்டத்தில் தகவல்கள் திரட்டப் படும் என்று அவர் தெரிவித் தார்.

30 ஆண்டுகால போரின் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதுவரையில் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ. நா. அமைப்பின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் போரின் கடைசி நாள்களில் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், வேறு சில சுயாதீன மான அறிக்கைகளில் இந்தக் காலப் பகுதியில் ஒரு லட்சம் பொது மக்கள் கொல்லப்பட் டார்கள் என்று மதிப்பீடு செய் யப்பட்டுள்ளன.

இந்த குடிசன மதிப்பீட்டு ஆய்வை கிராம சேவக அதிகாரிகள் மட் டத்தில் நடத்தி, சரியான தக வல்களை பெற்றுக்கொள்வ தற்கு பொதுமக்கள் பூரண ஒத் துழைப்பை அளிக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## தங்கம் கொண்டு வருவதில் வருகிறது புதிய நடைமுறை

### சுங்கத் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு,நவ.29

வெளிநாடுகளுக்கு தங்கத்தை எடுத்துச்செல்வதிலும், கொண்டு வருவதிலும் தற் போது காணப்படும் சட்டங்க ளில் திருத்தம் மேற்கொள் வதற்கு சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையர்கள் வெளி நாட் டுக்கு எடுத்துச்செல்லும் தங் கத்தின் அளவு மட்டுப்ப டுத்தப் படவுள்ளது என்று சுங்கப் பேச்சாளரும், சுங்க அத்தியட்ச கருமான லெஸ்லி காமினி தெரிவித்தார்.

வெளிநாட்டுக்குச் செல்லும் இலங்கைப் பெண்ணொருவர் 15 பவுண் தங்கத்தையும், ஆண் 5 பவுண் தங்கத்தையும், சிறார்கள் 5 பவுண் தங் கத்தை யும் கொண்டு செல்ல முடியும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்கு மாறாக அதிகளவி லான தங்கத்தைக் கொண்டு செல்லும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும். அந்தத் தங்கம் அரசு டமையாக்கப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த சில நாள்களில் அதிக ளவிலான இலங்கையர்கள் தங்கம் கடத்தும் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளதை கருத் தில் கொண்டு இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலை யத்தின் ஊடாக இந்தியாவுக்கு பயணித்த 26 இலங்கை யர்கள் அதிகளவிலான தங் கத்தைக் கொண்டு சென்ற மைக்காக இந்தியாவில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்று அவர் மேலும் கூறினார். (ச)

## சுதந்திர கட்சியின் திட்டம் குறித்து ஆராய்வு

கொழும்பு,நவ.29

சுதந்திரக் கட்சியால் மேற் கொள்ளப்படவுள்ள அரசியல் நகர்வுகள் மற்றும் திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற் காக கட்சியின் அகில இலங்கை செயற்பாட்டுச் சபையை எதிர்வ ரும் 18 ஆம் திகதி கூட்டுவதற் குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் மேல் மற்றும் தென் மாகாண சபைகளைக் கலைத்து விடவும், அந்த இரு மாகா ணங்களுக்கான தேர்தலை எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலை நடத்துவ தற்கு முன்னர் ஊவா மாகாண சபை யைக் கலைத்து விடுவ தற்குஏற் கனவே தீர்மானிக்கப் பட்டிருந் தது என்று சுதந்தி ரக் கட்சியின் உள்ளகத் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன. (ச-22)


## மரண அறிவித்தல்

### நடேசு கருணைதாசன்



மயிலாங்காட்டைப் பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி மல்லாகத்தை வசிப்பி டமாக வும்கொண்ட நடேசுகருணைதாசன் (கண்டு - நூலக உதவியாளர், யாழ். ஸ்கந்தவரோதயா கல்லூரி) நேற்று (28.11.2013) வியாழக் கிழமை இறைபதம் அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மாக்கிறெட் (ஓய்வு பெற்ற ஆசிரியை யாழ். சதானந்தா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கண வரும் நடேசு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் பரராசசிங்கம், சர்வானந்த சிவம் (காவலாளி நுண்கலை), கருணா வதி, காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ராசேஸ்வரி ,சாந்த குமாரி ஆகியோரின் சகலனும் அற்புதம், றெஜி னா, சத்தியநேசன், லோறன்ஸ் (மின்சார சபை சுன்னாகம்), சிறில் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற விக்ரர், கபில் ஆகியோரின் சகலனும் டென்சிலின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

இவரது இறுதிச்சடங்கு இன்று (29.11.2013) வெள்ளிமதியம் 12 மணியளவில் மல்லாகத்தில் அவரது இல்லத்தில் நடைபெற்று குளமாங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குளமங்கால் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : வி. அன்ரனி டென்சில் மல்லாகம்
077 7900410, 077 6038451



## 16 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY

இன்று (29.11.2013) வெள்ளிக்கிழமை தனது பிறந்த நாளை இனிதே கொண்டாடும் இவ் நாளில்

செல்வன் அழகுசாமி கௌரிநாதன்

அவர்கள் வாழ்வில் பல சிறப்புக்களையும் வாழ்த்துக்களையும் பெற்று மகிழ்வுடன் பல்லாண்டு வாழ வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மா, அப்பா, சகோதரர்கள், அண்ணிமார், நண்பர்கள்.

கோயில்குளம், மன்னார்.




## பொதுக்கூட்டம்

### சுய தொழில்புரிவோருக்கான சம்மேளனம் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம்

எதிர்வரும் 30.11.2013 சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கூட்டுறவாளர் மண்டபத்தில் (கிளிநொச்சி) சுயதொழில்புரிவோருக்கான சம்மேளனம் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்ககூட்டம் நடைபெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.


## வாகனத் திருத்துநர்களுக்கு பயிற்சி வழங்க நடவடிக்கை



கொழும்பு,நவ.29

வாகனங்களைத் திருத்துவது தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து வாகன திருத்துநர் களுக்கும் பயிற்சி வழங்கு வதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மோட்டார் வாகனங்களை திருத்துவது தொடர்பான புதிய தொழில்நுட்ப முறைகள் அவர் களுக்கு பயிற்றுவிக்கப்படும் என்று திணைக்களத்தின் ஆணையாளர் எச்.எஸ் ஹரிஸ் சந்திர கூறினார்.

இந்தப் பயிற்சிகளை வழங்கு வதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையா ளர் திணைக்களத்துக்கும், தொழில்நுட்ப கற்கை நிறுவ னத்துக்கும் இடையில் ஒப் பந்தம் கைச்சாத்திடப்பட்டுள் ளது என்று அவர் குறிப் பிட்டார்.

புகைப் பரிசோதனையின் பின்னர் மீண்டும் எஞ்ஜின்கள் திருத்தப்படவேண்டியுள்ள வாக னங்களை திருத்துவதற்கான உரிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று அவர் தெரி வித்தார்.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக, குருநாகல் மாவட் டத்தில் 900 வாகனத் திருத்து நர்களுக்கு பயிற்சி வழங் கப்படவுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


## கட்டணம் செலுத்தாத சுங்கத் திணைக்களம்

### ஒரு கோடி ரூபா வருமதி என்கிறது மின்சார சபை

கொழும்பு,நவ.29

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள சுங்கத் திணைக் களத்தின் தலைமையகக் கட் டடத்தின் மின் பாவனைக்காக செலுத்தப்பட வேண்டியுள்ள சுமார் ஒரு கோடி ரூபா மின் சாரக் கட்டணத்தை இது வரையில் சுங்கத் திணைக்க ளம் மின்சார சபைக்குச் செலுத்தத் தவறியுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான மின் விநியோகத்தை துண்டிப்ப தற்கு அங்கு சென்றிருந்த வேளைகளில் மின் கட்டணத் தைச் செலுத்துவதற்கு சுங்கத் திணைக்களத்திடம் நிதி வசதி இல்லை.

அதனால் மின்சார விநியோ கத்தை துண்டிக்காதிருக்குமாறு கோரிக்கைக் கடிதம் சமர்ப் பிக்கப்பட்டது.

அதனையடுத்து மின் துண் டிப்பு மேற்கொள்ளப்பட வில்லை என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் கூறினார்.

சுங்கப் பகுதி அரசுக்கு பெருந் தொகையான வரி வருமா னத்தை ஈட்டிக் கொடுக்கும் திணைக்களமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுங்கத் திணைக்கள தலை மையகக் கட்டடத்தின் மாதாந்த மின் கட்டணம் 75 லட்சம் ரூபா என்று சுங்கத் திணைக்கள தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலர் டபிள்யூ.எம். ஆர். பி.விஜேகோன் தெரிவித்துள்ளார். (ச-22)


## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து சிவநாதன்



பழைய தபாற்கந்தோர் வீதி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சிவநாதன் நேற்று முன்தினம் (27.11.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் பத்மினியின் அன்புக்கணவரும் மதுசனின் (யாழ். இந்துக்கல்லூரி) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தம்பி முத்து - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரசிங்கம் - அன்னலட்மி தம்பதியரின் மருமகனும் சிவபாதம், பத்மசுலோசனாதேவி, சிவகுமார் (கனடா), உதயதேவி (கனடா) காலஞ்சென்ற சிவயோகன் ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப.1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் ( 077 1325563)

தகவல் : குடும்பத்தினர்.

# ஆளுநருடன் வடக்கு முதல்வர் இணங்கிப் போவதே ஒரேவழி

## ஹெல உறுமய வியாக்கியானம்

"வடக்கில் ஆளுநர் ஒருவர் பதவியில் இருப்பதால் தமிழர்களின் உரிமைகள் மீறப்படுகிறது என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது" என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த வர்ண குலசூரிய தெரிவித்தார்.

"ஆளுநர் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவராவார். அவருடன் வடக்கு முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் ஒன்றிணைந்து செயற்படுவதே புத்திசாலித்தனமாகும்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "வடக்கு மக்களின் எண்ணம் போல் வடமாகாணசபைத் தேர்தலை அரசு நடத்தியது. அது மட்டுமல்லாது, வடக்கில் அரசினால் பாரிய அபிவிருத்திகளும் செய்யப்பட்டு மக்களின் அபிலாஷைகளுக்கும் மதிப்பளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், அங்குள்ள மக்களை குழப்புவது போன்ற கருத்துகளை யாரும் வெளியிடக்கூடாது. வடமாகாணத்தில் இராணுவ ஆளுநர் ஒருவர் பதவியில் உள்ளமையால் அங்குள்ள தமிழர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆளுநர் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். அவரை பதவியிலிருந்து விலக்க ஜனாதிபதியால் மட்டுமே முடியும். ஆளுநர் இருப்பதால் முதல்வருக்கு அதிகாரங்கள் இல்லை என்று அர்த்தமில்லை. தங்களுக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி மக்களுக்கு சேவை செய்யவேண்டும். இதை விடுத்து நீ பெரியவனா, நான் பெரிய வனா என போட்டியிட்டு மக்களின் வாழ்க்கையில் கூட்டமைப்பினர் விளையாடக் கூடாது.

எனவே, வடமாகாண சபை முதல்வர் க.வி.விகினேஸ்வரன் ஆளுநருடன் ஒன்றிணைந்து செயற்படுவதே புத்திசாலித்தனமாகும். இதை விடுத்து ஆளுநர் இருப்பதாலேயே அங்குள்ளவர்களுக்கு மனித உரிமைகள் மீறப்படுகின்றன என இனியும் இவர்கள் பொய்ப்பிரசாரங்களை செய் யக் கூடாது" என்றார்.

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை விடுத்து சர்வதேசம் நேசக்கரம் நீட்ட வேண்டும்

## நாடாளுமன்றில் அரசு கோரிக்கை

கொழும்பு, நவ.29

இலங்கை மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளும், விமர்சனங்களும் பக்கச்சார்பானவை - அடிப்படை ஆதாரமற்றவை எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சர்வதேச சமூகம் இலங்கைக்கு நட்புறவுடன் நேசக்கரம் நீட்டவேண்டும் என்றும் தெரிவித்தார்.

தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்காவிட்டால் அது இலங்கைக்கு மட்டுமல்ல, முழு தெற்காசியாவுக்குமே அச்சுறுத்தலாக அமைந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இதன் போது இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

நாட்டின் பெருமையையும், உண் மைத்தன்மையையும் உலக மக்களுக்கு எடுத்துக் காட்டி அதனைப் பாதுகாப்பதே எமது வெளிநாட்டுக் கொள்கையாகும். பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வந்த பல நாட்டுத் தலைவர் களும் இலங்கை தொடர்பில் நல்ல பல கருத்துகளை முன்வைத்தனர். இன்னும் சிலர் தமது தனிப்பட்ட அரசியல் தேவைகளுக்காக வடக்குக்குச் சென்றனர். இது நடைபெறுவது வழமை.

(த-சி)

## பிக்குகள் எண்மர் உண்ணாவிரதம்

கண்டி, தெவனகல புனித பூமியை முஸ்லிம்களிடமிருந்து மீட்டுத்தரக் கோரி பிக்குகள் எண்மர் நேற்று முதல் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்தனர். மாவனெல்லை நகரில் நடைபெறும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் சிங்கள ராவய அமைப்பின் தேசிய அமைப்பாளர் உட்பட 8 தேரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தெவனகல புனித பூமியை பாதுகாக்கும் அமைப்பினால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-8)

# கோதுமை மா விலையை உடனடியாக அதிகரிக்குக

## அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்து

"அமெரிக்க கோதுமை மாவின் விலையை அதிகரிக்கவேண்டும். இதனை எங்கு வேண்டுமானாலும் நான் அச்சமின்றிக் கூறுவேன்" என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வரவு - செலவுத்திட்ட விவாதத்திற்கு அதிக நாள்கள் தேவை என எதிர்க்கட்சிகள் கோரின. ஆனால் இந்த வரவு - செலவுத்திட்டம் குறித்துப் பேசுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு ஒன்றுமில்லை. ஒருவர் கூறுவதையே மற்றவரும் கூறுகின்றார். நாட்டின் அனைத்து மக்களினதும் நலன் கருதியே இந்த வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்திக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதனால்தான் அமெரிக்க கோதுமை மாவின் விலையை அதிகரியுங்கள் என்று நான் கூறுகிறேன் - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிரபாகரன்

வர்கள் இந்தக் கணக்கெடுப்பில் உள்வாங்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் இந்தக் கணக்கெடுப்பு எந்தளவுக்கு உண்மைத் தன்மை உடையதாக இருக்கும் என்பது குறித்து மனித உரிமை ஆர்வலர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் கொழும்பில் இடம் பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அவரது குடும்பம் இந்தக் கணக்கெடுப்பின் போது உள்ளடக்கப்படுமா என்று ஊடகவியலாளர் ஒருவர் தொகை மதிப்பீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் கேள்வி எழுப்பினார்.

"பிரபாகரனின் குடும்பத்தைக் கணக்கெடுப்புக்குள் உள்வாங்க முடியாது. அவரது குடும்பத்தில் யாரும் இப்போது உயிருடன் இல்லை. அது உலகத்துக்கே தெரியும். அவரது குடும்பம் தொடர்பில் தகவல் வழங்க யாரும் இல்லை என்பதால் கணக்கெடுக்க முடியாது" என்று பதிலளித்தார் பணிப்பாளர் நாயகம்.

இதேவேளை -

போர்க்கால இழப்புக்கள் தொடர்பான கணக்கெடுப்புக்கள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் ஒரு சில பிரதேசங்களிலேயே அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய பிரதேசங்களில் ஒரு சில தினங்களில் அவை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கு முன்னதாக கிராம சேவையாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பயிற்சி வகுப்புக்கள் முடிவடைந்த பின்னரே கணக்கெடுப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் கிளிநொச்சி மாவட்டத்திலும் கரைச்சி, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், வவுனியா நகர் பிரதேச செயலர் பிரிவில் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் முசலி, மாந்தை மேற்கு, மடு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கணக்கெடுப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர்கள் வீடு வீடாக வருகை தரும்போது சரியான தகவல்களை வழங்குமாறு குடியிருப்பாளர்களிடம் அதி காரிகள் கோரியுள்ளனர். (த-5)

### மன்னாரில்

குறிப்பிட்ட மூவரையும் பொலிஸார் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் இ.கயஸ்பல்டோனோவின் முன் நேற்று முற்படுத்தினர்.

இவர்கள் பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையிலும் இன முரண்பாட்டுக்கு வழி சமைக்கும் வகையிலும் செயற்பட்டுள்ளனர் என மன்றில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மூவரையும் 72 மணித்தியாலங்கள் வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் நிலையத்தில் வைத்து மேலதிக விசாரணையை மேற்கொள்ள அனுமதிக்குமாறு பொலிஸார் மன்றில் கோரினர்.

இதனை ஏற்றுக்கொண்ட பதில் நீதிவான் மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸில் வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியதுடன் அவர்களை அன்றையதினமே மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்துமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணிகளான பிரிமுஸ் சிராய்வா, ஜெயநேசன் லோட், எஸ். வினோதன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். (த-400)

### வடக்கு

வலி. வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள 6 ஆயிரத்து 382 ஏக்கர் நிலப் பரப்பில் தொடர்ச்சியாக வீடுகள் இடித்தழிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது காங்கேசன்துறைப் பகுதியில் வீடழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காங்கேசன் துறைப் பகுதியிலுள்ள 3 ஆலயங்கள், பாடசாலைகள் என்பன நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடித்தழிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இந்த இடித்தழிப்பு பகுதிகளைப் பார்வையிடுவதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று மாலை அங்கு சென்றுள்ளார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையாக உள்ள உயர்பாதுகாப்பு வலய எல்லையில் முதலமைச்சரைத் தடுத்த படையினர், உள்ளே செல்ல முடியாது என்று கூறினர்.

தான் வடக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்றும், இந்த மாகாணத்தின் முதலமைச்சரான நான், எனது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இடித்தழிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட உள்ளே செல்ல வேண்டும் என்றும் அவர் அங்கு நின்ற படையினரிடம் கூறியுள்ளார்.

இதற்கு அங்கு கடமையில் நின்ற படையினர், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாதவர்களை உள்ளே அனுமதிக்க முடியாதெனத் தெரிவித்தனர்.

உயரதிகாரிகளிடம் இது தொடர்பில் கேட்டுச்சொல்லுமாறு கடமையில் இருந்த படையினரிடம் கூறிவிட்டு முதலமைச்சர் அங்கேயே காத்து நின்றார்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த படையினர், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்று வருபவர்கள் மாத்திரமே உள்ளே செல்ல முடியும் என்று கூறி முதலமைச்சரைத் திருப்பி அனுப்பினர்.

"எனது மக்களின் மண்ணைச் சென்று பார்ப்பதற்குக் கூட மக்கள் பிரதி நிதியான எனக்கு அனுமதி மறுத்துள்ளனர். இந்த விடயத்தை சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்வேன்" என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை -

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்படுகின்றமைக்கு அகில இலங்கை இந்து மா மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன் அவ்விடத்துக்கு முதலமைச்சரைச் செல்லவிடாமல் படையினர் தடுத்தமை குறித்தும் அது விசனம் வெளியிட்டுள்ளது. (த-5)

### புற்றுநோய்

பதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெய்வேந்திர முனையிலிருந்து - பருத்தித்துறை முனைவரையில் முன்னெடுக்கப்பட்ட நடைபயணம் மூலம் திரட்டப்பட்ட 300 மில்லியன் ரூபா நிதியில் இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடைபயணத்தை ஒழுங்கு செய்த 'கலர்ஸ் ஒவ் கரேஜ்' நிறுவனத்தினால், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் பணிப்பாளர்களில் ஒருவரான நாதன் சிவகணநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தெய்வேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை முனை நோக்கி கடந்த 2011ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட எமது பயணம் 27 நாள்களில் 670 கிலோ மீற்றர் தூர நடையுடன் முடிவுக்கு வந்தது. நடை பயணத்தின் போது எம்முடன் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நடந்துள்ளார்கள்.

வடக்கு - தெற்கில் 15 சிறுவர்கள் தாம் சேர்த்திருந்த உண்டியல் பணத்தை எம்மிடம் கொண்டு வந்து தந்தனர். இது எம்மை நெகிழச் செய்தது.

இதன்போது எம்மால் 10 மில்லியன் ரூபா பணம் திரட்டப்பட்டது. இதற்கு மேலதிகமாக வெளிநாடுகளில் உள்ளவர்கள் மூலமாகவும் இதற்கு நிதியுதவி மற்றும் பொருளுதவி பெறப்பட்டே 300 மில்லியன் ரூபா திரட்டப்பட்டது.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், புற்றுநோய் வைத்தியசாலைக்கு 12 வைத்தியர்களையும், 40 தாதியர்களையும் முதல் கட்டமாக வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார் - என்றார். (த-5-86)

### இறங்குதுறை

அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக உலக வங்கியின் அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை அங்கு பயணம் மேற்கொண்டனர்.

இதன் போது துறைமுக அபிவிருத்தியின் குறை, நிறைகள் தொடர்பில் அவர்கள் மீனவர்கள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரிடம் கேட்டறிந்தனர்.

இதன்போது இறங்கு துறைக்கு அருகில், எண்ணெய்க் களஞ்சியம் அமைக்கப்படும் இடத்தில் இராணுவ முகாம் உள்ளமையால் அந்தப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை உள்ளதாகவும், எனவே இது தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேசி அந்த முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மீனவர் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

உலக வங்கியின் துறைமுக தொழில்நுட்பவியலாளர் மரீன், பொறியியலாளர் ஸ்கொற்றினோ, யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி கடற்றொழில் பரிசோதகர் ரமேஸ் கண்ணா ஆகியோர் இறங்குதுறையை நேரில் சென்று பார்வையிட்டனர். (த-14)

### மாணவருக்கு

இந்தக் குளிகைகளை நீருடன் கலந்து உட்கொள்ளும் மாணவர்களின் மத்தியில் தலைச்சுற்று மற்றும் புத்துணர்வு போன்ற வழக்கத்துக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதனை அடுத்து குறித்த வர்த்தக நிலையத்தை முற்றுகையிட்ட மாநகர சபைப் பொதுச் சுகாதாரப் பிரதம பரிசோதனை அதிகாரி தலைமையிலான குழுவினர் மாத்திரை கொண்ட பொதிகளைக் கைப்பற்றினர்.


கைப்பற்றப்பட்ட பொருள்களின் சுட்டித் துண்டுகள் அனைத்தும் சீன மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்டிருந்தன.

இதனை அடுத்து யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரிகளால் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் மற்றும் அவருக்கு இப்பொருள்களை விற்பனை செய்த யாழ் நகர வர்த்தகர் ஆகியோருக்கு எதிராக உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யாழ். நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட யாழ். நீதிமன்ற நீதிவான் சிவகுமார், கைப்பற்றப்பட்ட பொருள்களில் போதைப் பொருள்கள் கலந்திருக்கின்றதா? என்று அவற்றை களுத்துறை உணவுப் பகுப்பாய்வு நிலையத்திற்கு அனுப்பி அதன் அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்தை மூடுமாறும் உத்தரவிட்டார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வர்த்தகர்கள் இருவரையும் தலா 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதி அளித்தார். (த-400-4)

# வர்ண இரவின் பதிவுகள்






வடக்கு மாகாண சபையின் நான்காவது வர்ண இரவு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். வடமாகாண சபையின் அமைச்சர்கள் , உறுப்பினர்கள், கல்வி உயர் அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், சாதனையாளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். விளையாட்டுத்துறையில் சாதனைகள் படைத்தவர்களுக்கு இந்த நிகழ்வில் விருதுகள், பதக்கங்கள் என்பன வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது. (த-10-23-20)

# அராலி மாவத்தை வி.க நடத்தும் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் உழவர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே உதைபந்தாட்டப்போட்டி ஒன்று நடத்தப் படவுள்ளது.

7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக் கோட்டை விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துணைவி செள். நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# யாழ்.லீக்கின் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

கலைவாணி விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம். (த-23)

# ஆட்டங்களில் வென்ற அணிகள்

வவுனியா, நவ.29

வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 6 பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

786 விளையாட்டுக் கழக அணிக்கும் வடதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய 786 விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அனுஷாந் 10 ஓட்டங்களையும் அக்ரம் 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வடதாரகை விளையாட்டுக் கழக அணி சார்பில் துலாந்தன், அகிலன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடதாரகை விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைமட்டும்பெற்றது. றுவான் 9 ஓட்டங்களையும், சுதன் 12 ஓட்டங்களையும், பிரகாஸ் 8 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப்பெற்றனர்.

பந்துவீச்சில் 786 விளையாட்டுக் கழக அணி சார்பில் அக்ரம், சதீஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

வடதாரகை விளையாட்டுக் கழக அணி 2 இலக்குகளால் வெற்றி பெற்றது.

யங்ஸ்ரார் 'பி' அணிக்கும் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் 'பி' அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதன் 12 ஓட்டங்களையும், மயூரன் [illegible]ங்களையும் தமது அ[illegible]பாகப் [illegible]ற்றனர்.

பந்துவீச்சில் உ[illegible]யசூரியன் விளையாட்டுக் கழக அணி சார்பில் ஆதித்தன், சுஜி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

28 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் துடுப்பெடுத்தாடிய உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி எந்தவித இலக்குகள் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் கரன் 8 ஓட்டங்களையும், குமணேஸ் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

5 இலக்குகளால் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணிக்கும் பகலவன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாலேந்திரன் 10 ஓட்டங்களையும், சர்மா 5 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பகலவன் விளையாட்டுக் கழக அணி சார்பில் ஆதி, கரன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

22 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பகலவன் விளையாட்டுக் கழக அணி 2:5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (த-23)

# அரையிறுதி ஆட்டம் நாளை

வவுனியா, நவ.29

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டார வன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த அரை இறுதியாட்டத்தில் யூனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மருத நிலா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# பங்களாதேஷ் தலைவராக முஷ்பிக்கூர் நீடிப்பு

2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகள் வரை பங்களாதேஷ் அணியின் தலைவராக முஷ்பிக்கூர் ரஹீம் நியமிக்கப்பட்டுள்ளார். பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணியின் தலைவராக 2011ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வரும் முஷ்பிக்கூர் ரஹீம், இந்த ஆண்டு மே மாதத்தில் சிம்பாப்வேயில் வைத்து ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இழந்த பின்னர் தனது பதவியிலிருந்து விலகியிருந்தார்.



அதன் பின்னர் அந்த முடிவு தவறானது என அவர் தெரிவித்திருந்தார். ஜூலை மாதத்தில் பங்களாதேஷ் அணியின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்ட அவர், இவ்வாண்டு இறுதி வரை தலைவராகச் செயற்பட நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் குறுகிய காலத்திற்கான நியமனம் வழங்கப்பட்டிருப்பதாக முஷ் பிக்கூர் ரஹீம் விமர்சித்திருந்தார்.

இந்நிலையிலேயே தற்போது 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரை அணித்தலைவராகச் செயற்படும் வாய்ப்பு முஷ்பிக்கூர் ரஹீமுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணியை வழிநடத்துவதற்குத் தன் மீது காட்டப்பட்டுள்ள நம்பிக்கை குறித்து பெருமையடைவதாகத் தெரிவித்த முஷ்பிக்கூர் ரஹீம், பங்களாதேஷ் அணியின் எதிர்காலம் குறித்து பயிற்றுவிப்பாளர், ஏனைய வீரர்கள், அணிநிர்வாகம் ஆகியோருடன்இணைந்து செயற்படுவதற்குத் தனக்குக் கிடைத்த சிறப்பான வாய்ப்பு இது வெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)




சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியின் லீக் சுற்றில் இத்தாலியைச் சேர்ந்த மிலன் அணி வெற்றி பெற்றது. அதேசமயம், பலம் வாய்ந்த ஸ்பெயினின் பார்சிலோனா தோல்வியைத் தழுவியது.

ஐரோப்பாவில் உள்ள புகழ்பெற்ற உதைபந்தாட்டச் சங்கங்களுக்கு இடையே நடைபெற்று வரும் இப்போட்டியின 5ஆவது கட்ட லீக் சுற்று ஆட்டங்கள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

32 அணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப்போட்டி நடைபெற்று வருகிறது. 'எச்' பிரிவில் இடம் பெற்றுள்ள மிலன் அணிக்கும் ஸ்கொட்லாந்தின் செல்டிக் அணிக்கும் இடையேயான லீக் சுற்று ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், மிலன் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணியின் புகழ்பெற்ற வீரரான காக்கா (பிறேசில்) ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்திலேயே அசத்தலாக ஒரு கோல் அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

நெதர்லாந்தில் நடைபெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் (எச் பிரிவில்) நெதர்லாந்தைச் சேர்ந்த அஜக்ஸ் அணியும், பார்சிலோனா அணியும் மோதின. இதில் அஜக்ஸ 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் தோல்வியடைந்த போதிலும், 'எச்' பிரிவில் பார்சிலோனா முதலிடத்திலும், மிலன் 2ஆம் இடத்திலும் உள்ளன. (கு)




## பார்சிலோனா அதிர்ச்சி தோல்வி

# வென்றது பாகிஸ்தான்

பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது. இதன்படி, ஒரு போட்டி மீதமாகவிருக்கும் நிலையில் இத்தொடரை பாகிஸ்தான் அணி வெற்றிகொண்டுள்ளது.

மழை காரணமாக 45 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு போர்ட் எலிசபெத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

2 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கையும், 22 ஓட்டங்களுக்கு 2ஆவது இலக்கையும் இழந்த அவ்வணி சார்பாக, 3ஆவது இலக்குக்காக 124 ஓட்டங்கள் பகிரப்பட்டன. தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாக ஆட, அவ்வணி 262 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 112 பந்துகளில் 102 ஓட்டங்களையும், உமர் அக்மல் 30 பந்துகளில் 42 ஓட்டங்களையும், சொஹைப் மகூத் 59 பந்துகளில் 42 ஓட்டங்களையும், பிலாவல் பற்றி 15 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 9 பந்துப் பரிமாற்றங்களில் 39 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளையும், றயன் மக்லரன், இம்ரான் தாஹிர் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

263 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 45 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளைஇழந்து 261ஓட்டங்களைப்பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

9 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, இரண்டாவது இலக்குக்காக 87 ஓட்டங்களைப் பகிர்ந்தது. அதன் பின்னர் 4 இலக் குக்காக 110 ஓட்டங்களைப் பகிர்ந்ததோடு, இறுதி 12 பந்து களில் 11 ஓட்டங்கள் வெற்றிபெறத் தேவைப்பட்டன. 44ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 2 ஓட்டங்கள் மாத்திரம் பெறப்பட, வெற்றிபெறுவதற்கு இறுதி பந்து பரிமாற்றத் தில் 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால் 7 ஓட் டங்கள் மாத்திரமே பெறப்பட்டன. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 131 பந்துகளில் 98 ஓட்டங்களையும், ஏபிடிவில்லியர்ஸ் 45 பந்துகளில் 74 ஓட்டங் களையும், குயின்டன் டீ கொக் 52 பந்துகளில் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக ஜூனைட் கான் 42 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை யும், ஷகிட் அப்ரிடி 38 ஓட்டங்க ளுக்கு 2 இலக்குகளையும், சயீட் அஜ்மல் ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.

இப்போட்டியின் நாயக னாக அஹமட் ஷெஷாத் தெரிவா னார். (கு)

# 20/20 உலகக் கிண்ணம்: நேபாள அணி தகுதி

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு நேபாள அணி தகுதி பெற்றுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் உலகக் கிண்ணம் போன்ற பெரிய தொடருக்கு முதன்முதலாக நேபாள அணி தற்போதுதான் தகுதி பெற்றுள்ளது. இதனால், அந்நாட்டு கிரிக்கெட் ரசிகர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

அபுதாபியில் நேற்று முன் தினம் நடைபெற்ற தகுதிச் சுற்றுப் போட்டியில் நேபாள அணியும்,ஹொங்கொங்அணியும்மோதின. இதில், நேபாள அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனால், 20/20 உலகக் கிண்ணத்தில் விளையாடும் தகுதியை அந்த அணி பெற்றது.

அதேபோல், மற்றொரு தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சியம் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி 20/20 உலகக் கிண்ணத்தில் விளையாடும் தகுதியைப் பெற்றது. 20/20 உலகக் கிண்ணப் போட்டியில் மொத்தம் 16 அணிகள் போட்டியிட உள்ளன. இதில், 10 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றன. ஆப்கன், அயர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், நேபாளம் ஆகிய அணிகள் தகுதிச்சுற்றுகளின் மூலம் முன்னேறியுள்ளன. (கு)


# காதலியை மணக்கிறார் தினேஷ் கார்த்திக்

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் விரைவில் தனது காதலி தீபிகா பாலிகலை மணக்க உள்ளார்.

இந்திய அணிக்கான டெஸ்ட், ஒரு நாள் மற்றும் 20/20 போட்டிகளில் விளையாடியவர் சென்னையை சேர்ந்த தினேஷ் கார்த்திக்.

இவருக்கும், பிரபல ஸ்குவாஷ் வீராங்கனையான தீபிகா பாலிகலுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது.

கடந்தாண்டு ஜிம் ஒன்றில் தினேஷ் கார்த்திக்கும், தீபிகாவும் சந்தித்துள்ளனர். முதல் சந்திப்பில் காதல் மலரவில்லை என்றாலும் இருவரும் ஒரே உடற்பயிற்சி நிபுணரிடம் ஆலோசனைகளை பெற்று உடற்பயிற்சி செய்து வந்துள்ளனர்.



நட்பாக பழக ஆரம்பித்த இவர்களுக்குள் காதல் மலர்ந்துள்ளது, இவர்களது விவகாரம் வீட்டுக்குத் தெரிந்ததும் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஓராண்டு நிறைவடைந்த நிலையில், தினேஷ் கார்த்திக், தீபிகா ஜோடிக்கு சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. இதில் இருதரப்பை சேர்ந்த நெருங்கிய உறவினர்கள் கலந்துகொண்டனர்.

திருமணதிகதி இன்னும் முடிவாகாத நிலையில், அடுத்தாண்டு இருவருக்கும் திருமணம் நடைபெறும் என நெருங்கிய வட்டராங்கள் தெரிவித்துள்ளன. (கு)

# விலைமதிப்பற்ற ரூபா நாணயம்

ஒரு ரூபா நாணயங்கள் விலை மதிப்பற்றவை என மனம் திறந்து பேசியுள்ளார் சச்சின் டெண்டுல்கர்.
இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர்(வயது 40), சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.
தற்போது மும்பையில் உள்ள சச்சின் தனியார் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசுகையில், சிறுவயதில் எனது குரு அச்ரேக்கரிடம் பயிற்சி பெற்றேன். ஜிம்கானா மைதானத்தில் நடக்கும் பயிற்சியின் போது, ஸ்டம்ப் மீது ஒரு ரூபா நாணயத்தை வைத்து என்னை ஆட்டமிழக்கச் செய்யும் பந்துவீச்சாளர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்பார்.
ஆனால் பந்துவீச்சாளர்களுக்குத் தோல்வி தான் கிடைக்கும். இப்படி மொத்தம் 13 நாணயங்கள் வைத்துள்ளேன்.
அச்ரேக்கரிடம் இருந்து பெற்ற இந்த நாணயங்கள் தான் மற்ற அனைத்தையும் விட, எனது விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள்.
அடுத்து குத்துச்சண்டை வீரர் முகமது அலி கையெழுத்திட்ட கையுறை சிறப்பு நினைவுப் பொருளாக உள்ளது.
இதேபோன்று ஆஸ்திரேலியாவின் ஜாம்பவான் டொன் பிரட்மன். வழங்கிய துடுப்பு மற்றொரு முக்கியமான பொக்கிஷம், இது என்னிடம் இருப்பதை நினைத்து பெருமைப் படுகிறேன்.
ஸ்கொட்லாந்தின் மார்க் நாப்ளர் எனக்குத் தனிப்பட்ட முறையில் கிற்றார் பரிசளித்தார். இதுவும் எனது தொகுப்பில் முக்கியம் இடம் வகிக்கிறது என தெரிவித்துள்ளார்.(த)



# உதைபந்தாட்டத்தில் ஆட்ட நிர்ணய சதி

இங்கிலாந்து உதைபந்தாட்டப் போட்டிகளை முன் கூட்டியே நிர்ணயித்து ஆடும் ஆட்ட நிர்ணயம் என்ற மோசடிக் குற்றச்சாட்டுகளை விசாரித்துக் கொண்டிருக்கும் பிரிட்டன் பொலிசார் ஆறு பேரைக் கைது செய்திருக்கின்றனர்.
கைது செய்யப்பட்டவர்களில் குறைந்தது மூன்று பேர் உதைபந்தாட்ட விளையாட்டு வீரர்கள்.
ஆனால் இவர்களில் எவரும் தொழில்முறை உதைபந்தாட்ட அணிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் இல்லை என்று பி.பி.ஸி க்கு தெரிய வந்திருக்கிறது.
இந்த நடவடிக்கையின் கவனம் ஒரு சர்வதேச சட்டவிரோதச் சூதாட்டக் குழுவினரே என்று பொலிசார் கூறுகின்றனர்.
பிரிட்டனிலிருந்து வெளியாகும் டெய்லி ரெலிகிராப் பத்திரிகை இரகசியமாக நடத்திய புலன் விசாரணையினை அடுத்து இந்தக் கைதுகள் இடம்பெற்று வருகின்றன.
ஆசியாவில் இருந்து இயங்கும் இந்தப் பந்தயச் சூதாட்டக்காரர்கள் பிரிட்டனில் நடக்கும் விளையாட்டுகளைக் குறிவைப்பதாகவும், கீழ் மட்டத்தில் நடக்கும் லீக் பந்தயங்களை அவர்களால் 80,000 டொலர்களுக்கு முன் கூட்டியே தீர்மானித்து நடத்த முடிவதாகவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது. (த)


## லங்கா ரைல் காட்சியறை
## LANKA TILE SHOW ROOM

மேற்குறிப்பிட்ட காட்சியறைக்கு விற்பனை உதவியாளராகப் பணி புரியக் கூடிய ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மேற்படி துறையில் ஆர்வமும், கணினி அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
விண்ணப்ப முடிவுத்திகதி:- 29.11.2013.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி
விளம்பர இலக்கம் - 4477,
மே/பா 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் மைதானங்களின் பணிகள் தாமதம்

அடுத்த ஆண்டு பிரேஸிலில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டிகளுக்கான ஏற்பாட்டுப் பணிகள் பெரும் சவால்களைச் சந்திப்பதாக பிபாவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
கடந்தமுறை தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியின் ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும், பிபா உலகக்கிண்ணப் போட்டிகளை ஏற்பாடு செய்யும் குழுவில் அங்கம் வகிப்பவருமான டேனி ஜோர்டான் இந்தக் கருத்தை கூறியுள்ளார்.
பிரேஸிலில் போட்டிகளுக்கான விளையாட்டரங்குகளின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் நாள் முழுவதும் வேலை செய்ய கேட்டுக் கொள்ளப்படக் கூடிய தேவை வரலாமென ஜோர்டான் பி.பி.ஸியிடம்" தெரிவித்துள்ளார்.
தென்னாபிரிக்காவில் உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்ற போது, கட்டுமானப் பணிகள் பின்தங்கியிருந்த நிலையில், 24 மணி நேரமும் வேலை செய்து பணிகளை முடிக்கும் நிலை ஏற்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் தொடக்க ஆட்டம் நடைபெறவுள்ள சாவ் பாலோ நகரில் கட்டப்பட்டுவரும்விளையாட்டு அரங்கமும் இன்னும் தயார் நிலையில் இல்லை.
பிரேஸில் போட்டிகளுக்காக புதிதாகக் கட்டப்படுகின்ற 12 புதிய விளையாட்டு அரங்குகளில், சாவ் பாலோ உட்பட ஆறு விளையாட்டு அரங்குகள் இன்னும் தயார் நிலையில் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
விளையாட்டு அரங்கு களை கட்டுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக, கட்டுமானச் செலவுகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என பி.பி.ஸியின் செய்தியாளர் ஒருவர் கூறுகிறார்.
இதன் காரணமாக போட்டிகள் நடைபெறும்போது மேலும் போராட்டங்கள் நடைபெறுவதற்கு மேலும் வாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் எமது செய்தியாளர் கூறுகிறார். (த)


## OL/AL ? Get a UK degree BCS
## Now at KU British Computer Society
### British IT Qualification

குறுகிய காலத்தில்குறைந்த செலவில் பிரித்தானிய பட்டதாரியாகும் வாய்ப்பு. ஆர்வமுள்ள அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச கணினித்தகமை இதுவாகும். ஒப்பீட்டளவில் மிகக்குறைந்த கட்டணம். தவணைகளில் கட்டணங்களை செலுத்தும் வசதியும் பரீட்சைகளை பகுதி பகுதியாக எடுக்கும் வசதியும். பூரண விபரங்களும் விழக்கங்களும் நேரில் வழங்கப்படும்.

**BCS- Certificate in IT** (Equal to first year degree in IT)
**BCS- Diploma in IT** (Equal to second year degree in IT)
**BCS- PGD in IT** (Equal to a bachelor degree in IT)

ஆரம்பம் - 04/Jan/2014 (வருடத்தில் இரு பிரிவுகள் மட்டுமே)

Graduate Studies Division
**Knowledge Universe.**
No 424,K.K.S Road,Jaffna.
Tel: 021-3208342/021-2217335
http://edu.kugroup.info

Our Lecturer panel :
Mr.V.Nigushan
MCSE,BCS(PGD)
Miss.S.Myvili
BCS(PGD),MSc(IT)

## THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
PHYSICS K.Selvan
A/L2014 Electricity Sat, Sun 10-11.30 am
A/L2015 நீர் நிலையியல் Sat, Sun 6.30-7.30 am
புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.11.2013 சனிக்கிழமை

## IELTS தேவையே இல்லை
### நியூசிலாந்து, சைப்பிரஸ், UK

அடுத்த வருட அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
நியூசிலாந்து-மிக இலகுவாகச் செல்லலாம்.
2 வருடத்தில் PR பெற அருகதை
PR கிடைத்தால் ஆஸ்திரேலியா பறக்கலாம்
பகுதி நேர வேலைவாய்ப்பும் உண்டு
சைப்பிரஸ்-மலிவானது
ஐரோப்பிய நாடு. பகுதி நேரமாக ஒரு லட்சம் உழைக்கலாம்
UK பட்ட பட்டப்பின் படிப்பு
விண்ணப்ப முடிவு திகதி: 10.12.2013

திசைகாட்டி (பிறைவேற்)
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

## CBF DBF வங்கித்துறை வகுப்புக்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.11.2013-சனி 3.00p.m
CBM
291, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
33, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
N.Umakanth
077 711 0756
(40550)(4.6.3)

## பணியாளர்கள் தேவை
### சங்கென் ஸ்தாபனத்தின்

கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருநெல்வேலி

போன்ற இடங்களிலுள்ள கட்டட நிர்மாண பணிகள் நடைபெறும் வேலைத் தளங்களுக்குக் கீழ்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- மேசன்மார்
- மாபிள் பதிக்கும் மேசன்மார்
- சட்டறிங் தச்சுத் தொழிலாளிகள்
- கம்பி வேலை செய்பவர்கள் (Barbenders)
- கூலிகள் (Labours)

தொடர்பு: 071 716 5340

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
★ கமநலதிணைக்கள விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப 1.00 மணி-4.30 மணிவரை
★ SLEAS திறந்த பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் மு.ப 10.00 மணி - 2.00 மணிவரை
பிரிலியன்ட் கல்லூரி பட்டப்படிப்புக்கள்பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
075 4164564

## புதிய கல்வியாண்டு - 2014
தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!

30 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.

நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் O/L வரை

English Medium Classes Gr. 6 - O/L

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்
**தரம் 1 முதல் தரம் 5 வரை**
இவை அனைத்துக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன!
அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.

## சயன்ஸ் அக்கடமி
நல்லூர் – அரியாலை.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்க ளது பணிமனையில் 29.11.2013இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.